641

சர்வோதய ஆதாரங்கள்

வினோபா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MAD

641
4-56

Y<ω M95
6.56
110497

சர்வோதயப் பிரசுரம்

சர்வோதய ஆதாரங்கள்

REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MADRAS

ஆச்சாரிய விநோபா பாவே

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)
தஞ்சாவூர்

முதற் பதிப்பு—நவம்பர், 1956—5,000] [விலை அணா 4

YZ WM95
X156

பதிப்புரை

சென்ற வருஷம் மகான் விநோபா ஆந்திர தேச யாத்திரையின்பொழுது பெஜவாடாவில் டிசம்பர் 16 முதல் 19 வரை நான்கு நாட்களில் செய்த பிரார்த்தனைப் பிரசங்கங்களின் தொகுப்பாகும் இது. இவர்களது பேச்சுக்களைக் கேட்டோ, படித்தோ இருப்பவர்களுக்கு அவை ஆழ்ந்த கருத்துக்களும், சிக்கலான விஷயங்களுக்கு அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய விளக்கங்களும் பொதிந்திருப்பவை என்பது தெரிந்திருக்கும். அம்மாதிரியான அறிவுரைகள் ஒவ்வொரு நாளும் இவரது திருவாயினின்று வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவற்றை நேரிடையாகக் கேட்கும் பேறுபெற்றவர்கள் பாக்கியசாலிகளே. பிரார்த்தனைப் பிரசங்கம் ஒவ்வொன்றும் சிறப்புடையதேயாயினும், சில விசேஷ சந்தர்ப்பங்களிலும், நாட்களிலும் இடங்களிலும் அவை தனிச் சிறப்புடன் அமைவதைப் பார்க்கிறோம். இங்கே தொகுத்துத் தரப்படுபவை அவ்வகைத் தனிச் சிறப்புவாய்ந்தவைகளின் வரிசையில் சேர்ந்தவை என்பது இவற்றைப் படிப்போருக்கு விளங்காதிராது.

தஞ்சாவூர்
7–11–'56

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110497
MADRAS

Kabeer Printing Works, Madras (3426)

சர்வோதய ஆதாரங்கள்

முன்னுரை

கிராம மக்கள் ஆண்டவன் பணிபுரிவோராகையால் நகரவாசிகள் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். கிராம வாசிகள் கடவுளுக்கு நேரிடையாகத் தொண்டு புரிகிறுர்கள். கடவுளின் இத் தொண்டர்களுக்கு நகரவாசிகள் தொண்டு புரிய வேண்டும். இத்தகைய தொடர்பும் அன்பும் இந்தியாவின் நகர மக்களுக்கும் கிராம மக்களுக்கு மிடையில் தோன்றிவிடின் இந்தியாவில் ஒற்றுமை, ஒருமைப்பாடு அமையும்.

கிராமத்தில் காணப்படும் சிறப்புக்களை நகரவாசிகள் பெறப் பார்க்க வேண்டும். கிராம மக்களுக்கு உடலால் உழைத்துப் பாடுபடுவதில் பயிற்சி இருக்கிறது. நகர வாசிகளுக்கு இது இல்லை. ஒவ்வொருவருக்கும் உடல் உழைப்புத் தேவை; தேகாப்பியாசம் வேண்டும். தேகாப்பியாசம் இல்லையேல் உண்ணும் உணவு ஜீரணமாகாது. இதற்காக நகரங்களில் தேகப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. அவைகளுக்குப் போய் பலர் பத்து, பதினைந்து நிமிஷம் தண்டாலும், பஸ்கியும் போடுகிறுர்கள். இதனுல் வியர்வையைத் தவிர அவர்கள் உண்டாக்குவது வேறெதுவுமில்லை. ஏதேனும் பொருளுற்பத்தியும் ஆக உதவும் தேகாப்பியாசம் செய்யுமாறு நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். நகர வாசிகள் கிராம மக்கள் ஆகியோரின் வாழ்க்கைகளிலுள்ள ஒரு வேற்றுமை இது. இப்பொழுது நகரவாசிகள் தேகாப்பியாசத்திற்குப் பதிலாக உடலுழைப்புச்

செய்வதென்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். படித்தவர்கள் தேகாப்பியாசத்தைத் தவிர வேறு உழைப் பெதுவும் செய்வதில்லை. 'டம்பல்ஸ்' உருளைகளைக் கையில் எடுத்துக் கொண்டு அதை இங்குமங்கும் தூக்கி இறக்குகிறார்கள். எந்த உற்பத்திக்கும் உதவாத வேலை ஒன்றைச் செய்வதுதான் கௌரவமென்று கருதப்படு கிறது. நாம் பொருளொன்றை உற்பத்தி செய்து உற்பத்தியாளர், தொழிலாளி என்று சொல்லப்படுவத ஞல் என்ன நஷ்டமென்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் தொழிலாளி, பாட்டாளி என்றால் அவனிடம் பிறருக்கு அலட்சிய புத்தி இருந்து வருவ தால் அப் பெயரைச் சொல்லிக் கொள்ளவே நாம் விரும்புவதில்லை. பாடுபடுவோனை நாம் இழிந்தவ னென்று கருதுகிறோம். அசுத்தம் செய்து பாழாக்கு வோன் நாகரிகமுள்ளவனென்று சொல்லப்பட, அந்த அழுக்கை, ஆபாசத்தைக் கூட்டிக் கழுவித் துப்புரவாக் குவோன் தீண்டத் தகாதவனும்! இப் போக்கை நகர வாசிகள் விட்டு கிராம மக்களின் தொண்டில் ஈடுபட வேண்டும். கிராம மக்கள் நேரிடையாய் ஆண்டவனை வழிபடட்டும். அவர்கள் பொழுது புலர்ந்ததும் கிழக்கு நோக்கி சூரியனுக்குக் கும்பிடு போட்டுவிட்டு வயற்காடு களுக்குப் போய்ப் பாடுபடவும், நாம் அவர்களுக்குப் பணி செய்தோமாயின் சர்வோதயம் தோன்றும்.

சர்வ சேவா சங்கம்

இச் சர்வ சேவா சங்கமென்பது என்ன? மகாத்மா காந்தியின் மறைவுக்குப்பின் அவர் விதையிட்டு வளர்த்த பல ஸ்தாபனங்கள் தனித்தனியே வேலை செய்து வந்தன. கிராம மக்களுக்குப் பணி புரியவென அவர் ஸ்தாபனங் கள் பல அமைத்தார். அவையெல்லாம் பின் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய ஸ்தாபனமாயின. அதன் பெயரே சர்வ சேவா சங்கம் என்பது.

சர்வ சேவை என்றால் என்ன ?

இந்த 'சர்வ' என்ற சொல் மிகவும் சிறப்பு வாய்ந்தது. சாதாரணமாய் மக்கள் ஏதோ சேவை, உதவி செய்து கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் அது சர்வ சேவையாகாது. பலர் 'அசர்வ' சேவை செய்கிறார்கள். ஜாதிப் பித்தர்கள் செய்வது இவ்வசர்வ சேவையே. ஒருவர், 'நான் பிராமணர்களுக்குப் பணி புரிகிறேன்' என்கிறார். இன்னொருவர், 'நாங்கள் முஸல்மான்களுக்கு உதவி செய்கிறோம்; அவர்களின் நன்மையைக் கோருகிறோம்' என்கிறார். இவ்வாறு சிறுசிறு குழுக்களுக்கு, சமூகங்களுக்கு உதவுவதில் ஈடுபட்டிருப்போர், ஜாதி-சமயவாதிகள் எனப்படுவர். இன்னொரு சாரார் கம்யூனிஸ்டுகள். அவர்களும் 'அசர்வ'வாதிகளே. சமூகத்தில் இரண்டே வர்க்கங்கள் உள்ளன என்பது அவர்கள் கொள்கை. ஒன்று மாமன்மார், மற்றது மருமகன்கள். இவர்களிருவருக்குமிடையே விரோதமிருப்பதாய்க் கொண்டு நாம் இவைகளில் ஒரு வர்க்கத்திற்கு மட்டும் பணிபுரிய வேண்டும் என்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சமூகத்தை இருதுண்டுகளாகப் பாவிக்கிறார்கள். அவர்கள் சேவையுணர்ச்சியுடன் வேலை என்னவோ செய்கிறார்கள்; அவர்களது உள்ளங்களில் அன்பு ததும்புகிறது, உண்மையுணர்ச்சியிருக்கிறது. ஆனால் அவர்கள் சமூகத்தைக் கூறிட்டு, அக்கூறுகளில் ஒன்றை மட்டும் தமதாய்க் கொண்டு பாடுபடுகிறார்கள்.

'பீர்பலும் பாதுஷாவும்' என்ற கதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பாதுஷா ராஜ்யத்திலுள்ள மருமகன்மார் அத்தனை பேரையும் கழுவிலேற்றும்படி உத்தரவிட்டார். பீர்பல் ஏராளமாய் இரும்புக் கழுவுகள் செய்வித்தார். அவற்றுடன் பொன் கழுவு ஒன்றும் வெள்ளிக் கழுவு ஒன்றும் பிரத்தியேகமாய்த் தயாரிக்கச் செய்தார். பாதுஷா, 'கழுவுகள் சித்தமாகி விட்டனவா?' என்று கேட்க, பீர்பல், 'எல்லாம் சித்தமாயுள்ளன' என்று

சொல்லி அவைகளைக் கொணர்ந்து பாதுஷாவுக்குக் காட்டினார். அவைகளைப் பார்த்த பாதுஷா, 'ஆமாம், இவைகளில் ஒன்று பொன்னிலும் இன்னொன்று வெள்ளியிலும் செய்திருப்பது ஏன்?' என்று விசாரித்தார். அதற்கு பீர்பல் மெதுவாக, 'வெள்ளிக் கழுவு அடியேனுக்காக, பொன் எஜமானுக்காக; ஏனெனில் நாமும் எவருக்கோ மருமகன்கள் தாமே' என்று விடையளித்தார்.

ஆசையை விடுக!

இவ்வாறு எஜமானர்களை வெறுப்பவர்களும் தாம் உடைமை பெறவும் எஜமானராகவுமே விரும்புகிறார்கள். எஜமானர்கள் தம் பெரிய உடைமைகளைவிடச் சம்மதிக்கவில்லை யென்றால், இவர்களுக்கு தம் சிறு உடைமைகளை விடவும் இஷ்டமில்லை. சிறியவர்கள் பெரிய முதலாளிகளை வெறுக்கிறார்கள்; ஆனால் தாம் தம் சிறிய உடைமைகளிடம் அட்டையாய் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதனாலேயே பெரியவர்களுக்கும் தம் உடைமைகளை விடக் கூடாதென்று தோன்றுகிறது. 'நாம் எதற்காகப் பெரியவர்களை வெறுக்கிறோமோ, அதே குற்றத்தை நாமும் செய்கிறோம்' என்பதையே அவர்கள் எண்ணுவதில்லை. ஒருவனுக்குத் தன் கோவணத்திலாசை என்றால் இன்னொருவனுக்குத் தான் உடுத்தியுள்ள ஆடையில் பற்று. ஒருவன் தன் மாளிகையைவிட மறுத்தால் இன்னொருவனுக்குத் தன் குடிசையில் உயிர். இதனாலேயே 'சிறியவர்களெல்லாம் தம் சொத்தில் கொண்டுள்ள பற்றை, ஆசையை விடவேண்டும்; அப்பொழுதுதான் பெரிய முதலாளிகளுக்கும் உடைமைப் பற்று நீங்கும்' என்று சொல்லுகிறேன். ஒருவரை வெறுப்பதையே நம் வேலைத் திட்டமாய் நாம் கொள்வோமானால் அதனால் நம் பலம், சக்தி பெருகாது.

செல்வந்தர்களுக்கு எவ்வாறு சேவை புரிவது?

அனைவருக்கும் பணி புரிதல் சர்வ சேவா சங்கத்தின் கொள்கை. முதலாளிக்கும் தொழிலாளிக்கும், எளியோனுக்கும் சீமானுக்கும்—எல்லோருக்குமே பணி புரிதல் வேண்டும். இருவரும் மோதிக் கொள்ளக் கூடாது. 'சீமான்களுக்குச் சேவையாவது! அதை எப்படிச் செய்வது?' என்று கேட்கிறார்கள். அவர்களை அவர்களது செல்வத்தினின்று விடுவித்தலே அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய சேவை.

ஒரு இளைத்து மெலிந்த மனிதன். அவன் உடல் வற்றி தோலும் எலும்புமாய் கருவாடு போலிருந்தது. அவன் டாக்டரிடம் போனான். டாக்டர் அவனைத் தன்னிடமே வைத்துக் கொண்டு தினமும் மருந்தென்று சொல்லி எதையோ கொடுத்து, அவனைக் குடிக்கச் செய்து வந்தார். ஏனெனில் இக்காலத்தில் டாக்டர் நமக்கு எதையேனும் கொடுத்துக் குடிக்கச் சொல்லாவிட்டால் நமக்கு டாக்டரிடம் நம்பிக்கை உண்டாவதில்லை. மருந்துடன் கூடவே டாக்டர் அவனுக்கு லாடுவும் நெய்யும் பாலும் வேறு கொடுத்து வந்தார்.

'இந்த டாக்டர் நல்ல டாக்டர்; நோயாளிகளுக்கு லாடு கொடுத்தே நோயைப் போக்கி விடுகிறார்' என்று எல்லோரும் அவரைப் புகழ்ந்தார்கள். அவருக்கு எங்கும் பெயராகிவிட்டது. இதைக் கேள்வியுற்ற இன்னொரு நோயாளி டாக்டரிடம் போனார். அவரால் தன் உடலைத் தூக்கிக் கொண்டு நடக்கவே முடியாதிருந்தது; உடம்பில் அவ்வளவு சதை. ஒரு அடி எடுத்து வைத்தால், மேலும் கீழும் இறைக்கும். டாக்டர் அவரையும் தன்னிடமே வைத்துக்கொண்டு மருந்து கொடுக்கத் தொடங்கினார். டாக்டர் அவரிடம், 'நீங்கள் ஒரு பத்தியத்தை உறுதியாய் அனுஷ்டித்தால் உங்கள் உடம்பு குணமாகி விடும்' என்றார். நோயாளி 'நீங்கள் எனக்கு உயிர்ப் பிச்சை அளிப்பதாயிருக்க நீங்கள் சொல்லுகிறபடி

உறுதி செய்து கொள்ளுவதில் எனக்குத் தடையென்ன ?'' என்றார். டாக்டர், 'நெய், சர்க்கரை, மாவு என்ற மூன்றையும் நீர் ஏறிட்டே பார்க்கக்கூடாது. உமக்கு நான் காய்கறிகள்தான் தருவேன்' என்றார். நோயாளிக்கு இதைக் கேட்டதும் வெகு கோபம் வந்துவிட்டது. 'காய்கறிகளையும், இலை தழைகளையும் தின்று கொண்டிருப்பதற்கு நான் எருமையா? அவருக்கு மட்டும் நீர் லாடுவாய்க் கொடுத்துக் கொண்டிருக்க, என்னை இலை தழையை மேயச் சொல்லுகிறீரே! நான் எவ்வளவோ ஆசையாய் வந்தேனே!' என்றார். அதற்கு டாக்டர், 'நீங்கள் இருவரும் எனக்கு வேண்டியவர்தாம். ஆகையால் உங்களுக்கு உயிர் வாழவேண்டுமா, சாகவேண்டுமா? வாழவேண்டுமென்றால் உங்கள் எடையில் 50 ராத்தலைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் எடை அப்படியே இருக்கும், ஆனால் உயிர் இராது. பலவீனமாயுள்ளவனுக்குப் போஷாக்கு அளித்தல், அவனிடம் அன்பு காட்டுவதாக, உடல் ஏகமாய் ஊதியுள்ளவனுடைய சதையைக் குறைத்தல் அவனுக்குச் செய்யும் அன்புப் பணியாகும்' என்றார்.

அன்புக் கொள்ளை

ஆகையால் நான், 'சீமான்களிடம் அன்பு காட்ட வேண்டும்' என்று சொன்னால் கம்யூனிஸ்டுகள், 'அவர்களை வெறுக்க வேண்டும்' என்பார்கள். நான் நெய், ரொட்டி, சர்க்கரையை நிறுத்துவது அன்பு என்கிறேன். அன்பை நீங்கள் துவேஷமென்று ஏன் சொல்லுகிறீர்கள்? எனக்கும் உங்களுக்குமுள்ள வித்தியாசம் இது தான். நான் வீடு வீடாய்ச் சென்று பட்டப்பகலிலேயே கொள்ளையிடுகிறேன். எனக்குக் கொள்ளை கொடுப்பவரே என்னை வரவேற்று உபசரிக்கிறார். எனக்கு இன்று வரை ஐந்து லட்சம் தான பத்திரங்களும் எத்தனையோ வரவேற்புப் பத்திரங்களும் கிடைத்துள்ளன.

நியாயமாய் தானம் அளிப்பவர்களுக்கே மரியாதை செய்யப்பட வேண்டும். ஆனால் இங்கே நடப்பது நேர் மாறாய் இருக்கிறது. ஏனெனில் நான் அவர்களின் எடையை, பளுவைக் குறைத்திருக்கிறேன். ஐந்நூறு இருந்ததை இப்பொழுது நூறு ஏக்கராக்கியிருக்கிறேன். அவர் இப்பொழுது இன்னும் கொஞ்ச நாள் ஜீவிக்க வழி ஏற்பட்டுவிட்டது; எல்லோரும் அவரை வாழ்த்துவார்கள். இதனாலேயே எனக்கு வரவேற்புக்களும், மரியாதைகளும் நடக்கின்றன. இப்பொழுதுதான் ஒரு கிராமத்தில் ஒரு கம்யூனிஸ்டு நண்பர் என்னிடம் வந்தார். அவர் என் பேச்சைக் கேட்டார். பிறகு, 'நாங்கள் இம்மாதிரிப் பேசியிருந்தால் அரசாங்கம் எங்களைச் சிறைக்கு அனுப்பியிருக்கும்' என்றார். நான், 'உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். நீங்கள் இரவில் போய் ஏன் கொள்ளையிடுகிறீர்கள்? என் யுக்தியைப் பாருங்கள். தனவந்தர்களிடம் அன்பு காட்டுங்கள். அன்பாய் அவர்களின் எடையைக் குறையுங்கள்' என்று அவருக்குச் சொன்னேன்.

பிரிந்த சகோதரர் கூடினர்

தெலுங்கானாவில் 4½ ஆண்டுகளுக்கு முன் நான் சுற்றினேன். அப்பொழுது அரசாங்கத்தின் சிப்பாய்கள் மக்களை மிகவும் மோசமாய்க் கொள்ளை யிடுவதைப் பார்த்தேன். அவர்கள் ஜனங்களிடம், 'நீங்கள் கம்யூனிஸ்டுகளுக்கு உதவுகிறீர்கள். ஆகையால் வாருங்கள் சிறைக்கு' என்று சொல்லி மிரட்டி இம்சித்து வந்தார்கள். பாவம்! மக்கள் இரு வகையிலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இரவில் கம்யூனிஸ்டுகள் வந்து பயமுறுத்த, பகலில் அரசாங்கத்தின் போலீசும் சிப்பாய்களும் வதைத்தார்கள்.

இரு சகோதரர்களிடையே விரோதம் இருந்து வந்

ததை நான் கண்டேன். அவர்களுள் ஒருவர் காங்கிரஸ் காரர், மற்றவர் கம்யூனிஸ்டு. அவர்களின் நிலத்தில் பாதி ஒருவரிடமும் இன்னொரு பாதி மற்றவரிடமும் இருந்தது. இருவரும் நிலச்சுவான்தார்கள். நான் அவர்கள் இருவருக்கும் அறிவுறுத்தினேன்; அவர்கள் புரிந்து கொண்டார்கள். இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு அனைவரின் முன்னிலையில், 'இனி நாங்கள் அன்பாயிருப்போம்' என்று சொன்னார் கள். இருவரும் பூதானம் செய்தனர். அவர்களுள் கஞ்சனென்று சொல்லப்பட்டவரும் தானமளித்தார். பிறகு அவர்களது நண்பர்களும் தானம் செய்தனர். நான், 'நண் பகலில் கொள்ளையடிக்கிறேன். நீங்கள் இர வில் கொள்ளையடிக்கிறீர்கள். கொள்ளையில் பயமேன்? திருடுவதற்குப் பயப்படுவானேன்? நீங்கள் உங்களுக்கா கத் திருடவில்லை. கிருஷ்ண பகவான் பிறருக்காகத் திருடி வந்தார். பாகவதத்தில் கிருஷ்ணனுடைய திருட்டு வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் அதை ஐயாயிரம் ஆண்டுகளாக மிக்க பிரியத்துடன் படித்து வருகிறார் கள். கிருஷ்ணன் நிரம்ப வெண்ணெய் திருடித் தின்று வளர்ந்தவர். இதனால் அவரால் நல்ல பலம் பெற்று கம்சனுடன் குஸ்தி போட முடிந்தது. யசோதை அவ ரிடம், 'நீ ஏன் வெண்ணெய் தின்கிறாய்?' என்று கேட் டதற்கு அவர், 'வெண்ணெய் தின்னாமல் சாணத்தையா தின்ன வேண்டும்? நான் தனியாய்த் தின்பதில்லை. எனக்காகத் திருடுவதில்லை' என்று பதில் சொன்னார். பிறருக்காகச் செய்யப்பட்டதானால் திருட்டும் புகழப்படு கிறது. இதனாலேயே பகலிலேயே நான் கொள்ளையிட முடியும்பொழுது இரவில் கொள்ளையிடுவானேன் என்று கேட்கிறேன். அன்புடன் பகலில் கொள்ளையிட முடி வதே கலை. கலையின் மூலம் நடப்பது அன்பினாலும் நடைபெறாது. இதனாலேயே, 'செய்வதைக் கலை யழகு பொருந்தச் செய். அவ்வாறு செய்வதனால்தான் என்

ஞல் எல்லோரையும் கொள்ளையிட முடிகிறது' என்று சொல்லி வருகிறேன்.

சாம்ய யோகத்தின் பொருள்

நான் நிலத்தை வாங்கி என்ன செய்கிறேன்? நிலத்தைச் சேர்த்துக் கொண்டே போகிறேஞ? இல்லை. நிலத்தின் உடைமையையே அழிக்க விரும்புகிறேன். நீரில் எவருக்கும் தனியுடைமை இருக்க முடியாததைப் போல், காற்றிலும் சூரிய ஒளியிலும் தனியுடைமை இருக்க முடியாததைப் போல் நிலத்திலும் எவருக்கும் உடைமை இருப்பதற்கில்லை. கிராமங் கிராமமாய், வீடு வீடாய்ச் சென்று நான் இதைத் தான் சொல்லிவருகிறேன். மக்கள் நான் சொல்வதைக் கேட்கிருர்கள், தானம் கொடுக்கிருர்கள். சிலர் மோகம் காரணமாய், மாயை வயப்பட்டுக் கொடுக்காமலு மிருக்கிருர்கள். ஆஞல் நீங்கள் சொல்வது சரியல்ல என்று சொல்லக் கூடிய எவரையும் நான் இதுவரைக் காணவில்லை. நான் ஏழைகளை நேசிக்கிறேன், தனவந்தரிடமும் எனக் கன்புண்டு என்று நான் உரிமை கொண்டாடுகிறேன். துளசிதாசர், 'இது இராமன் அன்பின் தன்மை; அது பெரியோரின் பெருமையையும், சிறியோரின் சிறுமையையும் அகற்றுகிறது' என்று சொன்னதைப் போன்றே தான் நான் செய்கிறேன். ஆகையால் நான் சொல்வது ஒன்றும் புதிதல்ல. கீழேயுள்ளவர்களை மேலே கைதூக்கிவிட்டு, மேலேயுள்ளவர்களைக் கீழே இறக்கி இருவரையும் ஒன்று சேர்க்க வேண்டும். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் நான் சொல்வது புரிகிறது. மேடுகளும் பள்ளங்களுமாயுள்ள வயலில் எப்படிப் பயிர் செய்வது? விவசாயி முதலில் மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு நிரப்பி வயலைச் சமதளமாக்குகிருன். இது ஒவ்வொரு விவசாயிக்கும் தெரியும். இதுதான் சாம்ய யோகமென்பது. ஆஞல் இவர்கள்

அதை ‘சாம்ய வாதம்’ அல்லது ‘கம்யூனிசம்’ என்கிறார்கள். ‘வாதம்’ என்றால் அதற்கு எதிர்ப்பு இருக்கும். யோகத்திற்கோ எதிர்ப்புக் கிடையாது. சாம்ய யோகமென்றால் ஒவ்வொருவரும் தம் சக்தியை, சமுதாயத்திற்கு அர்ப்பணம் செய்து அதனிடமிருந்து கிடைப்பதைப் பிரசாதமாய் ஏற்றல் ஆகும்.

சர்வோதயத்தின் அடிப்படை

இப்பொழுது நான் சர்வோதயத்தின் அடிப்படைக்கு வருகிறேன். மனிதன் பிறக்கும் பொழுதே மூன்று பொருள்களுடன் அவனுக்குத் தொடர்பு ஏற்படுகிறது. ஒன்று அவனது உடல். அதைக் கொண்டே அவனது வாழ்க்கை முழுவதும் நடக்கிறது. அதை அவன் தனது என்கிறான். அதோடு கூடவே மனம், அறிவு, பொறிகள் ஆகியவையும் சேருகின்றன. இது அவனது வெளி உருவம். இதைத் தவிர அவனுக்குச் சமூகத்துடனும் தொடர்பு ஏற்படுகிறது. அதில் அவனது பெற்றோரும் வருகிறார்கள். அவர்களுடன் அவனுக்குள்ள தொடர்பு இயல்பாக அமைவது. அதாவது அவனுக்கு ஒரு தொடர்பு உடலுடனும் இன்னொன்று சமூகத்துடனும் ஏற்படுகிறது. உடலையும் மனத்தையும் நான் வெவ்வேறென்று கருதவில்லை. உடல் சிருஷ்டியின், படைப்பின் ஓர் அம்சமாகையால், நான் அதைச் சிருஷ்டியில் சேர்ந்ததென்றே கொள்ளுகிறேன். இவற்றைத் தவிர இக்காலத்தில் நான்காவதாக ஒன்று முளைத்திருக்கிறது. அதுதான் அரசாங்கம். அதாவது மனிதனுக்கு அவனது மனம், அவனுள்ள சமூகம், அவனைச் சூழவுள்ள சிருஷ்டி, அவன் உள்ள நாட்டை ஆளும் அரசாங்கம் ஆகியவற்றுடன் தொடர்பு உள்ளது.

அரசாங்கம் இயற்கையாக அமைந்ததல்ல, நாமாக அமைத்துக் கொண்டது. ஆனால் இன்றோ மனிதன் பிறப்பதுதான் தாமதம், உடனே அவன்மீது அரசாங்

கத்தின் அதிகாரம் செலுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சக்தி, அதிகாரம் எங்கும் பரந்திருப்பதால் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அது தொட்டுக் கொண்டிருக்கிறது. பிறந்தது முதல் இறக்கும் வரை அது நம்மை விடுவதில்லை. ஆகையால் இது நாமே சிருஷ்டித்துக் கொண்டதாயினும் இதைப் பற்றியும் யோசித்தல் அவசியமாகியுள்ளது. இந் நான்கு பொருள்களின்மீது வாழ்க்கைக் கட்டடம் முழுமையுமே நிற்கிறது.

1. மனம்

அத்தியாத்ம வித்தை

மனிதனுக்கு அவனுக்கே உரிய மனம் ஒன்று உளது. அம்மனத்தில் பலவகை விகாரங்களும் வாசனைகளும் உள்ளன. ஓரளவுக்கு அவ்வாசனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதே. ஆனால் அதை எந்த அளவுக்குச் செய்ய வேண்டும் என்பதை யோசிக்க வேண்டும். மனிதனுக்குப் பசிக்கிறது, சாப்பிடத் தோன்றுகிறது. ஆனால் அதிகம் தின்றுவிட்டால் நோய் வந்துவிடுகிறது. உணவு கொள்ளும் வாசனையைத் திருப்தி செய்ய வேண்டியதே. ஆனால் அதிகமாய் உண்டுவிடக் கூடாது. விகாரத்தையும் நாவையும் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் நாம் அத்யாத்ம வித்தை என்கிறோம்.

இதன் பொருள் மனிதனிடம் சமநிலை இருக்க வேண்டும் என்பது. மனிதன் அனுபவிக்க வேண்டியது தான்; ஆனால் அதி ஆகாது. வாசனை இருக்கட்டும்; ஆனால் அதுவும் அளவோடிருக்க வேண்டும், அதியாய் இருக்கக் கூடாது. இவ்வாறு நடுவு நிலையில் நிற்பதற்கே யோகமென்று பெயர். இந்த யோகம் கைவந்துள்ள மனிதர்களால் அமைந்த சமூகம் இன்புற்று விளங்கும். ஆகையால் சர்வோதய சமாஜத்தின் பயிற்சியில் அத்தியாத்ம வித்தைக்கு முதலிடம் உண்டு.

நாம் ஸ்திதப்பிரக்ஞனது இலட்சணங்களை ஓதுகிறோம். அவைகளில் இருப்பது என்ன? தன்பொறிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஆபத்து நேருகையில் ஆமை தன் அவயவங்களை உள்ளே இழுத்துக் கொள்ளுவதும் ஆபத்தில்லாத இடங்களில் அவற்றை வெளியே இருக்கவிடுவதும்போல் செய்பவனே ஸ்திதப்பிரக்ஞன். இது அப்படி ஒன்றும் அசாதாரணமான, அபூர்வமான

சக்தியல்ல. சிறுவயது முதலே பயிற்சியளிக்கப்பட்டால் மனிதனுக்கு இது இயல்பாகிவிடும்.

குளிராயிருக்கையில் தீ தேவைப் படுகிறது. ஆனால் தீயினருகில் போய் உட்காரு என்று சொல்ல வேண்டி யிருப்பதில்லை. தீப்பட்டு எரிந்து போகுமாறு அருகி லும் போய் உட்காரக் கூடாது. சிறிது விலகியே இருந்தால் குளிரின் கஷ்டம் நீங்கும். வெகு அருகில் போய்விட்டால் கை கால் வெந்துபோம். வெகு தொலைவி லிருந்தால் பயனில்லாமற் போக, மிகவும் நெருங்கினாலும் ஆபத்தாகி விடுகிறது. குளிர் காய்வதற்குத் தீயிலிருந்து எவ்வளவு தொலைவில், தீக்கு எவ்வளவு அருகில் இருக்க வேண்டும் என்பதை எவரும் நமக்குச் சொல்லித்தர வேண்டியிருப்பதில்லை. இது அப்படி ஒன்றும் பெரிய விஷயமல்ல; நமக்கு இதுவரையில் தெரியாமல் புதிதாய் உண்டாக்கப்பட்டதல்ல. நாம் இதற்காகப் பாடு எதுவும் படத் தேவையில்லை. இதில் நன்மையுண்டு என்பது தெளிவு.

செயற்கை முறையில் உருவாகியுள்ள சமூகத்தில் குழந்தைகளுக்கு பெற்றோர் தவறான பயிற்சியளித்து விடுகிறார்கள். இயல்பாகவே மிளகாய் தின்னுவதில் ஆசையுள்ள குழந்தையை நாம் எங்கும் காணமுடியாது. இனிப்பு என்றால் எல்லாக் குழந்தைகளுக்குமே பிடிக் கிறது. காரம், உப்பு என்றால் குழந்தைகள் விரும்புவ தில்லை. கீதையில், 'காரமும் உப்பும் தின்னாதே; இனிப்பையே கொள்' என்று போதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெற்றோர் குழந்தைகளை காரமும் உப்பும் தின்னவே பயிற்றுகிறார்கள். குழந்தைக்குச் சிறிது காரம் கொடுத்துவிட்டால் போதும், அவன் உடனே இது எனக்கு வேண்டாமென்கிறான். ஆயினும் சிறிது சிறி தாய்ச் சாப்பிடு என்று அவர்கள் சொல்லிக் கொடுக் கிறார்கள். இதனால் அவனது இயல்பு மாறிப்போகிறது. ஏன், சிறிது காலத்திற்கெல்லாம் காரசாரமாய் இல்லாத

எதுவுமே அவனுக்கு ருசிப்பதில்லை. அப்பொழுது கீதையின் போதனையைப் பின்பற்றுவது சிரமமாகிறது. இதை நான் உதாரணமாய்ச் சொன்னதற்குக் காரணம் கீதை நமக்குப் போதிக்கும் விஷயங்கள் சிரமமானவை யல்ல என்பதைத் தெரிவிக்கவே. ஆனால் தவருன பயிற்சி காரணமாக கெட்ட பழக்கங்கள் ஏற்பட்டுவிடுவதால் நமக்கு அது சிரமமாய்த் தோன்றுகிறது.

புகையிலை

ஆந்திர தேசத்தில் குழந்தைகளுக்கே பீடி குடிக்கும் பழக்கம் அளிக்கப்படுகிறது என்பதைக் கவனித்தேன். இங்கே மிகவும் சிறந்த நிலத்தில் புகையிலை பயிராக்கப் படுவதையும் கண்டேன். இதுமட்டுமல்ல. என்னை வர வேற்க வருவோரும் வாயில் பீடி வைத்துக்கொண்டே வருவதையும் நான் பார்த்தேன். தாம் செய்வதில் தவறு இருப்பதாகவே அவர்களுக்குத் தோன்றவில்லை. ஏனெனில் அவர்களது பெற்ருேர் குழந்தைப் பருவத்தி லிருந்து அவர்களுக்கு இதையே கற்பித்து வந்திருக் கிருர்கள். ஆந்திர நாட்டில் எங்கும் புகையிலை வயல் களே என் கண்ணில் பட்டதால் நான் அதற்குப் ‘ புகையிலை ’ என்பதைவிட ‘ ஆந்திர இலை ’ என்ற பெயர் அதிகப் பொருத்தமானது என்றுகூடச் சொல்லியிருக் கிறேன். ஏனெனில் இந்நாட்டு விவசாயிகளுக்கு வாழ்க்கை இன்பம் முழுமையும் புகையிலையிலிருந்தே கிடைக்கிறது. புகையிலை, பீடியென்ருல் என்னவென்று தெரியாத ஒருவரைப் புதிதாய்க் குடிக்கச் சொன்னுல் அவர் குடிக்கமாட்டார் ; ஏனெனில் அது நாறுகிறது ; மூக்கில் புகை ஏறி மூச்சுத் திணறிப் போகிறது. குழந்தை மணக்கும் பூவொன்றைக் கண்டால் அதைப் பெறுவதற்குக் கைகளை நீட்டுதல் இயல்பு. ஆனுல் குழந் தையின் கவனம் முழுவதையும் கவரக்கூடிய வாசனை புகையிலைக்கு இல்லை ஆயினும் துர்ப்பழக்கம் ஒன்று

ஏற்பட்டுவிட்டால் அது இல்லாமல் இருக்கவே முடியாமல் போய்விடுகிறது. நான் சிந்தனை புரிதல் அவசியமா யுள்ள சிலரைப் பார்த்திருக்கிறேன். சிந்தனை அவசிய மானவுடனே அவர்கள் ஒரு சுருட்டைக் கொளுத்திக் கொள்ளுவார்கள். அதன் தீயின் ஒளியில் அவர்களின் சிந்தனை தொடங்கிவிடும் !

பொறிகளின் கட்டுப்பாடு

துர்ப்பழக்கத்தை விடுதல் சிரமம். கெட்ட பழக் கங்கள் காரணமாக புலனடக்கம் சிரமமாகி விடுகிறது. இல்லையேல் இது சாதாரண விஷயம். ஒரு ஆமைக்குத் தெரிந்தது எப்படி மனிதனுக்குத் தெரியாமல் போகும்? ஆபத்துள்ள இடத்தில் பொறிகளை உள்ளே இழுத்துக் கொண்டு ஆபத்தில்லாதபொழுது அவற்றை வெளியே வைத்துக்கொள்ள ஆமைக்குத் தெரிகிறதே. பசியெடுக் கும் பொழுது அளவாய் உணவு கொண்டு, தாகமாயிருந் தால் நீர் அருந்துதல் மனிதனுக்குச் சிரமமானதல்ல. அதிகம் உண்ணுமையும் உறங்காமையும் அப்படியே தான். தூக்கத்தைக் குறைக்கவும் கூடாது. இதெல் லாம் சிரமமா? இவைகளை நாம் பயிலவேண்டுமா? ஆனால் தவருன கல்வி, பயிற்சி அளிக்கப்பட்டுவிடுவதால் இவையெல்லாம் ஏதோ பெரிய தவம் இயற்றுவதுபோல் நமக்குத் தோன்றுகின்றன. புலனடக்கப் பயிற்சி இதனு லேயே சிரமமாய்த் தோன்றுகிறது. ஆனால் சர்வோதயக் கோட்பாட்டில் தன் மனத்தை வயமாக்குதலும், பொறி களை அடக்குதலும் முக்கியமான தத்துவங்களாகும்.

ஆந்திர நாட்டில் நான் மக்களை மௌனமாய்ப் பிரார்த்தனை புரியவேண்டுமென்று சொன்னுல் அவர்கள் மிகவும் அமைதியாய் மௌனப் பிரார்த்தனை புரிகிருர் கள். நான் இதற்கு மிகுந்த சக்தியுண்டென்று கருது கிறேன். இதில் புலனடக்கத்தின் பெருஞ்சக்தி பொதிந் துள்ளது. இதற்கென கல்வித் திட்டத்தில் இடமளிக்கப்

படவேண்டும்; வழிவகை இருக்க வேண்டும். இது நடைபெறும்பொழுது புலனடக்கம் சிரமமாயிராது. மனிதன் முன்னேறுவான். இதற்குத்தான் அத்தியாத்ம வித்தை என்று பெயர். இதில் மனமும் பொறிகளும் கட்டுப்படுத்தப் படுகின்றன. இங்கே ஆசைகளையெல்லாம் அழிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அவைகளை அளவாய், சரியாய் உபயோகிக்க வேண்டுமென்கிறோம். குதிரைச் சவாரி செய்வோன் கடிவாளத்தைக் கையில் பிடித்திருக்கையில் குதிரை அவன் சொன்னபடி கேட்பதைப்போல் நம் பொறிகளும் கட்டுப்படுத்தப் படுகையில் நம் ஏவலைச் செய்யும். அவை நம்மிடமுள்ள பெரிய சக்திகள். அவைகளை நம் வயமாக்கும் வித்தையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இது மனிதனுக்குள்ள ஒரு காரியம்.

2. சமூகம்

நன்மைகளிடையே முரண்பாடில்லை

மனிதனது இரண்டாவது காரியம் சமூகத்திற்காகச் செய்யப்படுவது. சமூகத்தில் பல மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களிடையே வேறுபாடுகள் தோன்றாத வகையில் சமூகத்தை அமைக்க வேண்டும். ஒருவனது உண்மையான நலனுக்கு முரணாக இன்னொருவனது உண்மை நலன் இருக்கவே செய்யாது. இது சுலபமான விஷயம், கடினமானதல்ல. நாம் சமூகத்தில் இருப்பது மற்றவருக்காகவே. ஆகையால் நாம் பிறரது நன்மையைக் கவனிக்க வேண்டும். இருவரது நலன்கள் முரண்படின் அதனால் சமூகத்திற்கு நன்மை இல்லை. ஒரு மனிதன் வித்துவானானால் அதனால் சமூகம் முழுமைக்கும் பயனுண்டே தவிர, தீமையில்லை. ஒருவனது ஆரோக்கியம் நன்றாய் இருந்தால் அதனால் எவருக்கும் நஷ்டமில்லை. இவ்வாறு யோசிக்கையில் ஒருவரது நன்மையிலேயே இன்னொருவரின் நன்மையும் அடங்கும் என்பது புரிந்துவிடும். ஆனால் இன்று நாமாகச் சிருஷ்டித்த சமூக சாத்திரமொன்று வந்திருக்கிறது. அதில் மனிதர்களின் நலன்கள் ஒன்றுக்கொன்று முரணானவை யென்று சொல்லப்பட்டிருக்கிறது. தவறான பயிற்சியினால் கெட்டபழக்கங்கள் ஏற்பட்டிருப்பதைப்போல், தவறான சமூக சாத்திரத்தினால் மனிதர்களின் நலன்களிடையே விரோதம் தோன்றியிருக்கிறது. இந்நிலையில் அனைவரின் நலனையும் காத்தல் கடினமாகி விட்டது.

விரோதச் சங்கங்களின் தோற்றம்

இன்று பாஷாவாரி மாகாணங்கள் உருவாகி வருகின்றன. ஒவ்வொரு மாகாணத்தவரும் இன்னொருவரது நலன் தம் நலனுக்கு எதிராயிருப்பதாய் எண்ணுகிறார்

கள். ஒரு மாகாணத்தின் மக்கள் அனைவரின் அபிப்பிராயம் ஒன்றாயிருக்க இன்னொரு மாகாணத்தின் மக்கள் அபிப்பிராயம் நேர்மாறாய் இருப்பது வியப்பாயிருக்கிறது. இது ஏன்? இதற்குக் காரணம் நாம் படித்த சமூக சாத்திரம் மனிதர்களின் நலன்கள் ஒன்றுக்கொன்று முரணானவையென்று நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறது. அவரவர் நலன்களைப் பாதுகாக்க தனித்தனிச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. அகில பாரத மாணவர் சங்கம் எதற்காக? எதற்காகவென்றால் மாணவர்கள் தம் நலனும் தம் ஆசிரியர் நலனும் முரணானவையாகையால் தம் நலனைப் பாதுகாக்க ஒரு சங்கம் வேண்டுமென்கிறார்கள். ஆசிரியர்களின் நலனும் மாணவர்களின் நலனும் முரணானவையாம்! மாணவர்களின் நலன் ஆசிரியர்களின் நலனிலிருந்து மாறுபடுபவையாம்! என்ன வேடிக்கையைச் சொல்ல!! இப்பொழுது ஒரே ஒரு சங்கம் ஏற்படுவதுதான் பாக்கி. அதாவது அகில பாரத தந்தையர் சங்கம் ஒன்று, அகில பாரத தனயர் சங்கம் ஒன்று. இவைகளும் தோன்றிவிட்டால் நம் ஸ்தாபன அமைப்பு வேலை பூர்த்தியாகிவிடும்!

மனைவிக்கும் கணவனுக்கும் முரண்

இங்கிலாந்தில் முன்பு பெண்டிர்க்கு ஓட்டுரிமை இருந்ததில்லை. அங்கே ஆடவர் நலனுக்கும் பெண்டிர் நலனுக்கும் முரண்பாடும் பெண்டிர் நலனுக்கும் ஆடவர் நலனுக்கும் வேற்றுமையும் தோன்றிவிட்டன. கணவனுக்கும் மனைவிக்குமிடையே வர்க்கப் போராட்டம் தோன்றிற்று. மனைவிமார் தம் உரிமைகளின் பொருட்டு கணவன்மாரை எதிர்த்துப் போராடவேண்டி வந்தது, பார்லிமெண்டில் போய் முட்டைகளை வீசி அவர்களைத் தாக்க நேர்ந்தது. இறுதியில் கணவருக்கு மனைவி சொல்வதை ஏற்கவும் அவளுக்கு ஓட்டுரிமை அளிக்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நம் நாட்டில்

இம்மாதிரியான வேறுபாடெதுவும் தோன்றவில்லை. நம் தாய்மாருக்கும் தந்தையருக்கும் இம்மாதிரியான போர் மூளும் என்பதை நம்மால் எண்ணிப் பார்க்கவே இயல வில்லை. ஆனால் அங்கோ இம்மாதிரியான பிரச்னையும் தோன்றிற்று, அந் நாட்டுப் பெண்களுக்குப் போரிட வேண்டியும் வந்தது. இவ்வாறு ஒருவர் நலனுக்கு இன்னொருவர் நலன் முரணானதென்று கற்பித்துக் கொண்டதன் மூலம் இவ்வியற்கைக்கு மாறான சமூக சாத்திரம் உருவாகியுள்ளது.

எண்ணிக்கையின் மகத்துவம்

இவ் விரோதத்தை அகற்றுவதற்காக அரசியலும் உருவாயிற்று. அது எல்லாக் காரியங்களையும் பெரும் பாலோர் அபிப்பிராயப்படிச் செய்ய வேண்டுமென்றது. அது ஓட்டுக்களை எண்ணத் தொடங்கிற்று. 51 பேர் சாதகமாகவும் 49 பேர் பாதகமாகவும் அபிப்பிராயப் பட்டால் 51 பேர் சொல்லுகிறபடிச் செய்ய வேண்டும். நான் ஓரிடத்தில் பார்த்தேன். ஒரு கொலை வழக்கில் விசாரித்த ஐந்து நியாயாதிபதிகளுள் மூவர் குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்தவனே, அவனைத் தூக்கிலிட வேண்டியதே என்று தீர்ப்பளிக்க, மற்ற இரு நியாயாதிபதிகளும் அவன் நிரபராதி என்று முடிவு கூறினார்கள். ஆனால் பெரும்பாலோரின் அபிப்பிராயப் படி குற்றம் செய்ததாய்க் கூறப்பட்டவன் தூக்கிலேற் றப்பட்டான். இவ்வாறு பெரும்பாலோரின் அபிப்பிரா யப்படியே எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும், சிறுபான்மையோரும் பெரும்பாலோரின் அபிப்பிரா யத்தை ஏற்று நடக்கவேண்டுமென்ற தத்துவம் கிளம்பி யிருக்கிறது.

ஏற்கத் தகாத தத்துவம்

இக்காலத்தில் எல்லாம் பரந்து விசாலமாகவேண்டும் என்றே எங்கும் பேச்சாயிருக்கிறது. உங்களுக்கு 'விசால ஆந்திரம்' வேண்டுமானல் உங்கள் உள்ளங் களைப் பெரிதாக்கிக் கொள்ளுங்கள். இவர்கள் அரசியல் அமைப்பில் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் பத்துப் பிரதிநிதிகளே பார்லிமெண்டிற்குப் போகலாமென்றிருந் தால் என்ன பயன்? விசால பாரதம் ஒரே மாகாண மானல் பத்துப் பிரதிநிதிகள்தானே பார்லிமெண்டிற்குப் போக முடியும்? அதற்குப் பதிலாக மூன்று மாகாணங் கள் அமையுமானல் நன்ருயிருக்குமே! கடற்கரையி லுள்ள புகையிலைப் பண்பாடுள்ள ஒரு பகுதி, குடி போதையில் மயங்கிக் கிடக்கும் தெலுங்காண பண்பாடு இரண்டாவது; ராயலசீமாவின் கம்பு, சோளத்தின் பண்பாடு மூன்ருவது என்று மூன்று மாகாணங்கள் ஏற்பட்டால் பார்லிமெண்டிற்கு முப்பதுபேர் போக முடியும். இன்னும் உத்தரப் பிரதேசக்காரர்களுக்கும் குஷி பிறந்தால் அவர்களது பிரம்மாண்டமான மாகா ணத்தை நான்காய்ப் பிரித்துக் கொள்ளலாம். ஒரு மாகாணமாயிருந்தால் பத்துப் பேர்தானே போவார்கள்; நான்கு மாகாணமானல் நாற்பதுபேர் போக முடியுமே என்ற இதெல்லாம் குழந்தைகளின் விளையாட்டே. இதில் பொதுமக்களின் நலனைப்பற்றி எவருமே எண்ணவில்லை. பெரும்பாலோரின் அபிப்பிராயமென்ற மேல்நாட்டார் சிருஷ்டித்த கோட்பாடு இங்கே வந்திருக்கிறது. நாம் சுய அறிவைப் பறி கொடுத்துவிட்டோம். இங்கே ஆங்கி லேயர் ஆட்சி நடந்துவந்ததால் அவர்களின் கருத்தை நாம் ஏற்றுக்கொண்டோம். மேல்நாட்டாரிடமுள்ள நல்ல விஷயங்களைப் பின்பற்றக் கூடாதென்று நான் சொல்ல வில்லை. நல்ல விஷயமெதுவும் மேல்நாடுகளில் இல்லை என்பதும் என் கருத்தல்ல. ஆனல் அங்கிருந்து பெற்ற இத் தத்துவம்மட்டும் ஏற்கத் தக்கதே அல்ல.

தேர்தலென்ற விஷ விருக்ஷம்

ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த கோராபுட் ஜில்லாவில் அறுநூறு கிராமங்கள் தானம் கிடைத்திருக்கின்றன. அத்தனை கிராமங்களும் தம் நிலமனைத்தையும் தானம் அளித்துவிட்டன. 25 ஏக்கர் நிலம் வைத்திருந்தவர் அது முழுமையும் கொடுத்துவிட்டார். அவருக்குத் திரும்ப ஐந்து ஏக்கரே கிடைக்க, அவர் அதைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார். ஒவ்வொருவருக்கும் கணக்குப்படிக் கிடைக்கவேண்டிய நிலத்தை அவரவர் பெற்றுக்கொண் டனர். ஏனெனில் நிலமெல்லாம் அனைவருக்கும் பொது என்பதை அவர்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள். நலன் களில் முரண்பாடு எதுவுமில்லை. நவீன சமூக சாத்திர மும், நவீன பொருளாதார சாத்திரமும் அவர்களுக்கு என்னவென்றே தெரியாது. ஆனால் ஒரிஸ்ஸாவின் தலை வர், 'கோப பாபு'வுக்கு பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பது பெரிய பிரச்னையாயுள்ளது. 'பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும் இக்கிராமங்களுக்கு வந்து தங்கள் தங்களுக்கு ஓட்டளிக்க வேண்டுமென்று கேட் பார்களே; ஒரு கிராமத்தவர் ஒரு கட்சிக்கும் இன்னொரு கிராமத்தவர் இன்னொரு கட்சிக்கும் ஓட்டளிப்பதாய் வைத்துக் கொள்ளுங்கள்; அப்பொழுது அவ்விரு கிரா மங்களினிடையில் விரோதம் தோன்றுமே; கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு கிராம மக்களின் நலனைப்பற்றிக் கவலை யேது?' என்பதே அவர் கவலை.

இந்தத் தேர்தல் நடக்கிறதே, அதற்குப் பிரத்தியேக மான நியாய, அநியாயக் கோட்பாடு உளது. அதனிடம் மூன்று தத்துவங்களுள்ளன. அவை, தற்புகழ்ச்சி, பிறரைத் தூஷித்தல், பொய்யும் புளுகுமாய்ப் பேசுதல் என்பவை. கிராமத்தில் இதன் விளைவாகப் பிளவு ஏற் படுமானால் இதுவரை பட்ட பாடெல்லாம், செய்த காரி யங்களெல்லாம் பாழாகிவிடும். தீயிடுதல் சுலபம்; பற்றிய தீயை அணைத்தல் மிகவும் சிரமம். பாகவதத்தில்

கோகுலத்தில் தீப்பற்றிவிடவே பகவான் அத் தீ முழுவதையும் குடித்துவிட்டதாய்க் கதை வருகிறது. இங்கே தீயிடுவதற்கு எத்தனையோபேர் இருக்கிறார்கள். அவர்கள் தேர்தல் வேலைக்காகக் கிராமந்தோறும் சென்று தீயிடுவார்கள். பிறகு அக் கிராமங்களின் கதி என்ன ஆவது என்பதுபற்றிய கவலை அவர்களுக்கு இல்லை. இப்பொழுது கிராமசேவை செய்வோருக்கு நம் கிராமங் களைக் காப்பது எப்படி என்ற பெரிய பிரச்னை ஏற்பட் டிருக்கிறது. கொணர்ந்து பயிர் செய்யப்பட்டுள்ள இவ் விஷ விருக்ஷத்திற்குத் தப்புவதெப்படி என்ற கேள்வி அவர்கள்முன் எழுந்திருக்கிறது.

பஞ்சாயத்தின் தீர்ப்பு கடவுளின் தீர்ப்பு

நம்மிடம் இதற்கு ஓர் உபாயம் இருந்தது. நாம் கிராமத்திலுள்ள பெரியோர், பஞ்சாயத்தார் வாக்கைத் தெய்வ வாக்கென்று கருதி வந்தோம். எவ்விஷயத்திலும் பஞ்சாயத்தார் அனைவரும் ஒரே, ஏகோபித்த முடிவு தான் செய்வார்கள். அவர்களின் முடிவுப்படியே காரியம் நடைபெறும். இப்பொழுது புதிதாய் வந்துள்ள சமூக சாத்திரமோ ஐந்தில் நான்குபேர் முடிவும், மூவர் முடிவும் கடவுள் வாக்கு என்கிறது. நான்குபேர் சாதகம் ஒருவர் பாதகம் என்றால், தீர்மானம் நிறைவேறிவிடுகிறது. மூன்றுபேர் ஆதரிக்க இருவர் எதிர்த்தாலும் தீர்மானம் நிறைவேறிவிடுகிறது. புதிதாய் வந்துள்ள இவ்வேற்பாடு உலகெங்கும் தீயிட்டுள்ளது.

புதிய சமூக அமைப்பு

நாம் புதிய சமூகமொன்றை உருவாக்கவேண்டும். அது நலன்களுக்கிடையே விரோதமில்லை யென்பதை ஏற்கும். இத்தகைய சமூகம் அமைத்தல் சிரமமான தல்ல. ஆனால் இன்றுவரை ஒரு தவறான கருத்து பழக் கத்திலிருந்தது காரணமாக இச் சாதாரண, எளிய

விஷயமும் கடினமானதென்று கருதப்பட்டது. கோரா புட் ஜில்லாவின் எழுத்து வாசனையே அறியாத மக்கள் நலன்களினிடையே முரணில்லை என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். மிகவும் சுலபமான, நேர் விஷயம். ஆனால் இது மூன்று கோணல் மாணலாய் முறுக்கிக் கொண்டு கிடக்கிறது. இந்தப் பெரும்பாலோர் அபிப் பிராயம் சிறுபாலோர் கருத்து என்ற பழக்கம் புதிதாய் ஏற்பட்டிருப்பதால் மிகவும் கொடிய விளைவுகள் தோன்றி யுள்ளன. அதனால் கோடிக் கணக்கான ரூபாய் செல வாகிவருகிறது. இதில் ஏழைகள் தலைகாட்டவே முடி யாததுடன், ஜாதி வேற்றுமைகள் மிகவும் அதிகமாகி இதுவரை ஜாதி வேற்றுமைக்கே இடங்கொடாத கம்யூ னிஸ்டுகளிடையிலும் இது புகுந்துவிட்டது. அவர்கள் பணக்காரன், ஏழை யென்ற வேற்றுமையையே ஒப்பி வந்தார்கள். அந்த அளவு வேற்றுமை அவர்களுக்குப் போதுமானதாய் இருந்தது. ஆனால் யாரோ 'கம்மா'வும் 'ரெட்டி'யும் சேர்ந்து காம்ரேட் என்ற கம்யூனிஸ்டுகளின் சொல் உருவாகிறதென்று எனக்குச் சொன்னார். கம்யூ னிஸ்டுகளிடையிலும் கம்மாக்களுக்கும் ரெட்டிகளுக்கும் விரோதமாம்! இது எவ்வளவு பயங்கரமான விஷயம் பாருங்கள்! ராம்மோகன் ராயில் தொடங்கி காந்தி வரையில் அடிமேல் அடி வாங்கி உயிர் போகும் தறுவாயி லிருந்த இந்த ஜாதி வேற்றுமை இத்தேர்தல் காரணமாக சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் என்ற சாக்கில் வளர்ந்து வருகிறதே! இதை ஜனநாயகத் தின் வரப்பிரசாதமென்று உணருங்கள். இதனாலும் நாம் அடியிலிருந்து தொடங்கி எல்லாவற்றையும் அமைக்க வேண்டும். புதிய சமூக சாத்திரம் உருவாக்க வேண்டும். போதனா சாத்திரத்தை ஒட்டியே சமூக சாத்திரம் அமையுமாகையால் போதனா சாத்திரத்தையும் நாம் மாற்றவேண்டிவரும்.

3. சிருஷ்டி

சிருஷ்டியுடன் மனிதனுக்கு எத்தகைய தொடர்பிருக்க வேண்டும்? சிலர் மனிதன் சிருஷ்டியுடன் போர் புரியவேண்டி யிருக்கிறது என்று எண்ணுகிறார்கள். அவர்கள் சங்கர்ஷவாதிகள். அவர்களில் சிலர் சிந்தனு சீலர்கள். அவர்கள், புதிய சாத்திரமொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள், 'முதலில் மனிதர்களிடையே மோதல் ஏற்படும்; அதன்பின் சிறிது ஒழுங்கு முறை வரும்; பின் புதிய நிர்மாணமாகும்; அதன் பிறகு பொருள் பெருக்கமும், செல்வ வளர்ச்சியும் ஏற்படும்; அதற்கும் பிறகு ராஜ்ய ஏற்பாடே அகன்று விடவும் மோதலும் நீங்கும்' என்கிறார்கள். சங்கர்ஷம் அல்லது மோதல்வாதிகள் மனிதர்களிடையே மோதல் நீங்கினால் மனிதனுக்கும் சிருஷ்டிக்கும் பலமான மோதல் தொடங்கிவிடும் என்கிறார்கள். இப்பொழுது சிருஷ்டி எப்பொழுது தோன்றிற்று, மனிதன் எப்பொழுது, எங்கிருந்து தோன்றினான் என்பவை யோசிக்கவேண்டிய விஷயங்கள். சிருஷ்டி எப்பொழுது உண்டாயிற்று என்பதைச் சொல்லவே இயலாது. சிருஷ்டி ஆதியும் அந்தமும் அற்றது. இரவில் வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இவ்வளவு பெரிது சிருஷ்டி. எனவே அது எப்பொழுது தோன்றிற்று என்ற கேள்வியே தேவையில்லை. ஆனால் நாம் உள்ள இப்பூமி சுமார் 200 கோடி வருஷங்களுக்கு முன் உண்டாயிற்றென்றும் மனிதன் தோன்றியது 50 லட்சம் வருஷங்களுக்கும் இப்பால் என்றும் கொள்ளலாம். மனிதன் இவ்வளவு சமீபத்தில் தோன்றியவனாயும் சிருஷ்டி மிகவும் பழையதாகவும் இருப்பதால் சிருஷ்டியுடன் மனிதன் என்ன போர் தொடுத்துவிடப் போகிறான்? குழந்தை தாயுடன் போட்டியும் போரும் புரியுமா?

N56

மோதல் என்ற பிரச்னையே இல்லை

தாய் குழந்தைக்கு அன்பாய்ப் பாலூட்ட, குழந்தை சுகமாய்ப் பால் அருந்துகிறது. ஒருவர் குழந்தை தாயுடன் போர் புரிகிறது என்று சொன்னால் நாம் அதைப் புத்திசாலித்தனமாய்க் கொள்வோமா? நாம் சிருஷ்டிக்குப் பணிபுரிய வேண்டும் என்பதை உணருகிறோம். சிருஷ்டி நமக்கு தாய் குழந்தைக்குப் பாலூட்டி வளர்ப்பதைப்போல் பாலளிக்க, அதன் பாலினால் நாம் பலம்பெற்று வளருகிறோம். நாம் பூமியைத் தோண்டுகிறோம். நமக்கு அடியிலிருந்து கிடைக்கும் தண்ணீர் சிருஷ்டிதரும் பாலே. அதனாலேயே நாம் வளருகிறோம். ஆகையால் நாம் சிருஷ்டிக்குப் பணிபுரிதல் வேண்டுமென்று உணருகிறோம். மோதல்வாதிகள் இதையே மோதுதல் என்கிறார்கள். இது சொற்களின் வேற்றுமையல்ல, கருத்து வேற்றுமையே. இதன் விளைவாகச் சிலர் இன்றுள்ள சிருஷ்டியினால் தோன்றியுள்ள மனிதர் அத்தனை பேரையும் போஷிக்க இயலவில்லை யென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். குழந்தைகள் தாய்க்கு உதவி செய்யுமானால் தான்பெற்ற குழந்தைகள் அத்தனை பேரையும் தாய் வளர்க்கவே செய்கிறாள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

TAMIL NADU ARCHIVES LIBRARY
110497

தசமுகனின் பிறப்பு

நம் நாட்டில் ஜனத்தொகை பெருகிவருவது மக்களுக்குப் பாரமாய்த் தோன்றுவது ஒரு விசித்திரமான விஷயமே. சேனாதிபதி தன் சேனையில் ஏராளமான சிப்பாய்கள் சேர்ந்து விட்டார்களேயென்று குறைகூற மாட்டான். ஒரு குடும்பத்தவர், 'எங்கள் நிலைமை மிகவும் மோசம். ஏனெனில் ஒருவர் சம்பாதித்துப் போட பத்துப்பேர் சாப்பிட இருக்கிறோம்' என்று சொல்லுகையில் எனக்கு மிகவும் வியப்பாயிருக்கும்.

இக் குடும்பத்தில் தின்பதற்குப் பத்து வாய்கள் இருக்க, வேலை செய்ய இரண்டு கைகளே இருக்கின்றனவென்றால் குடும்பத்தில் பத்துத் தலை ராவணன் பிறந்திருக்கிறானோ என்ற சம்சயம் எனக்குத் தோன்றும். 'வீட்டில் பத்து வாய்கள் இருக்கின்றனவென்றால் இருபது கைகள் இல்லையா?' என்று நான் கேட்பேன். ஆனால் கைகள் இருபது இருந்தும் அவை வேலைசெய்யாது வாளா யிருத்தல் யார் குற்றம்? கடவுள் சிருஷ்டியின் குற்றமா? கடவுள் நமக்கு இரு வாய்களும் ஒரு கையுமே கொடுத் திருந்தால் நாம் குறைகூற இடமுண்டு. ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லையே. அவர் இரு நீண்ட கைகள் கொடுத்திருக்கையில் குறைக்கு இடமேது?

பூமிக்கு தன்மீதுள்ள மக்கள் பாரமாய் இருப்ப தில்லை, பாவந்தான் பாரமாய்த் தோன்றும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். பாவத்தினால் மக்கள் தொகை பெருகினால் அது நிச்சயமாய் பாரமாயிருக்கும். மக்கள் பாவத்தினாலும் பெருகலாம், புண்ணியத்தினாலும் பெருகலாம். அதேபோல் மக்கள் பாவத்தினாலும் குறையலாம், புண்ணியத்தினாலும் குறையலாம். மக்கள் பெருகினாலும் சரி, குறைந்தாலும் சரி, புண்ணிய மானால் பாரமிராது, பாவமானால் அது பாரமா யிருக் கும். அதனால் தீமை விளையும். பிரம்மசரியத்தினால் மக்கள் குறைந்தால் நன்மையுண்டு, ஆண்மை இன்மை யால் குறைந்தாலோ தீங்குதான். புலனடக்கத்தினால் குறைந்தால் லாபமும், செயற்கை உபாயங்களினால் குறைக்கப்பட்டால் தீமையும் விளையும். புண்ணியத்தி னால் வளரும்பொழுது இலாபமும், வெறும் கட்டற்ற போகத்தினால் வளரும்பொழுது தீமையும் உண்டாகும். சிருஷ்டியில் உள்ள அத்தனை உயிர்களுக்கும் தேவை யான உணவு முதலிய போஷணைக்குவேண்டிய ஏற்பாடு சிருஷ்டியிலேயே இருக்கிறதென்பது நம் கொள்கை. ஆனால் சிருஷ்டிக்குச் சேவை புரிவதற்கென கடவுள்

நமக்களித்துள்ள இரு கைகளேயும் நாம் நன்கு பயன் படுத்தவேண்டும்.

நியாயமற்ற வழி

இக் காலத்தில் செயற்கை உபாயங்களினுல் குடும்பக் கட்டுப்பாடு செய்வதுபற்றி வெட்கமில்லாமல் பேசுகிருர்கள். அதனுல் அநியாயம் எவ்வளவு வளரும், புலனடக்கத்திற்கு உதவவேண்டிய சக்தி எவ்வளவு குறையும், வாழ்க்கை முழுவதிலுமே ஆற்றலின்மை எவ்வளவு பரவும் என்பதை யெல்லாம் மக்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இவர்களுக்கு 'மால்தஸ்' என்ற ஒரு ரிஷி. மக்கள் தொகை அதிகம் பெருகினுல் அது அத்தனையையும் போஷிக்கும் சக்தி பூமிக்கு இல்லை என்பது அவருடைய சித்தாந்தம். அப்படியானுல் 'ஆடம்-ஹைடிரஜன் பாம்'கள் செய்யப்படுவதைக் கண்டு அழுவானேன்? அவைகளினுல் மக்கள் இறப்பார்களென்ருல் நல்லதுதானே! ஒரு சிலரே உயிர்வாழ்வார்கள் என்பது குறித்து வருத்தம் எதற்கு? நாம் பராக்கிரமசாலிகளாய், செயல் திறமுள்ளவர்களாய், ஆராய்ச்சி மனப்பான்மை யுள்ளவர்களா யிருக்கவேண்டும். இதன் பொருட்டு விஞ்ஞானத்தை வளர்க்கத் தேவையானுல் இஷ்டம்போல் வளருங்கள். சிருஷ்டியின் விஞ்ஞானம் வளரவளர சிருஷ்டியினுல் அதிக நன்மையுண்டு. ஆகையினுல் விஞ்ஞானம் மேன்மேலும் வளருவதையே நான் விரும்புகிறேன்.

சிலருக்கு, 'நான் விஞ்ஞானத்தை விரும்பவில்லை. எனக்கு ராட்டைகளை விருத்தி செய்வதில்தான் நோட்ட' மென்று தோன்றுகிறது. அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நான் ராட்டை சுற்றவும் விரும்புகிறேன், விஞ்ஞானமும் விரும்புகிறேன். ஜனங்கள், 'ஆகாய விமானத்தின் வேகம் இப்பொழுது மிகவும் பெருகிவிட்டது, நாம் ஐந்தே மணியில் தில்லி சேர்ந்து

விடலாம்' என்கிருர்கள். நான் அவர்களை, 'உங்கள் விஞ்ஞானத்திஞல் இவ்வளவுதாஞ முடிந்தது? நீங்களே தான் ஐந்துமணி நேரம் உட்கார்ந்தேயிருத்தல் சிரமம் என்கிறீர்கள். விமானத்தில் வேண்டிய மாறுதல் கள் செய்து அதிலிருந்தபடியே நூல் நூற்க வசதி செய் யுங்கள். இது முடியாவிட்டால் உங்கள் விஞ்ஞானத்தி ஞல் பயனென்ன?' என்று கேட்கிறேன்.

ஞானமும் விஞ்ஞானமும்

ஆன்மாவின் ஞானத்திஞல் நமக்கு நன்மை ஏற்படு வதைப்போல் சிருஷ்டியின் விஞ்ஞானத்திஞலும் நமக்கு நன்மையே. நமக்கு ஞானம், விஞ்ஞானம் ஆகிய இரண்டும் தேவை. இரு சிறகுகளைக் கொண்டு பறவை பறப்பதைப்போல் மனித வாழ்க்கையும் இவ்விரண்டை யும் கொண்டே முன்னேறவேண்டும். மனித சமூகம் பண்டுதொட்டே ஆன்ம ஞானத்திற்கும் விஞ்ஞானத் திற்கும் முயன்று வந்திருக்கிறது. விஞ்ஞானம் ஓங்கி வளரவேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஆஞல் அதைச் சரியான முறையில் பயன்படுத்தும் அறிவும் நமக்கு வேண்டுமென்பது என் விருப்பம். நாம் தீயைப் பயன்படுத்தலாம். ஆஞல் அதைச் சோறு சமைக்கப் பயன்படுத்த வேண்டுமேயல்லாது இன்னெருவர் வீட் டைக் கொளுத்துவதற்குப் பயன்படுத்தக் கூடாது. ஆகையால் விஞ்ஞானம் வளரவேண்டும், அதை நல்ல முறையில் பயன்படுத்தும் சக்தி நமக்கு வேண்டும். 'அணுயுகம் வந்துகொண்டிருக்கிறது; இனி அது நல்ல காரியங்களுக்குப் பயன்படும்' என்கிருர்கள். அணு யுகத்தில் கிராமக் காரியங்கள் எப்படி நடக்குமென்று வினவுகிருர்கள்? எனக்கும் 'இந்த யுகத்தைச் சிறிது ருசித்துப் பார்க்கலாமே, அதஞல் பெறக்கூடிய பயனை நானும் பெறலாமே, அணுச்சக்தியைப் பரவலாய் எங்கும் வியாபிக்கச் செய்து, கிராமந்தோறும் அதைப் பயன்

படுத்தலாமே, என்ற எண்ணத்தினுல் விஞ்ஞானத் துறையில் நடைபெறும் சோதனைகளிடம் எனக்கும் மதிப்பே இருந்து வருகிறது.

மின்சாரத்தின் உபயோகம்

எனக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துதல் சம்மதந் தான். ஆனுல் அது எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது என்பது முக்கியமான விஷயம். ஒரு சிலரிடம் மட்டும் சக்தியை அளித்தால் அதை அவர்கள் பிறரைச் சுரண்டு வதற்குப் பயன்படுத்தத் தொடங்கிவிடுவார்கள். இப் பொழுது நடந்து வருவது இதுவே. இதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். மின்சாரம் வந்தால் எங்கே வரும்? முதலில் பெரிய நகரங்களுக்கும், பிறகு கிராமங்களுக் கும் வரும். தொலைவிலுள்ள கிராமங்களுக்கு அதுபோய் எட்டாது. அப்பொழுது அதன் பயன் அனைவருக் கும் ஒரேவகையில் கிட்டாது. அதற்குத் தேவையான முதல் செல்வந்தர்களிடம் இருக்கும், ஏழைகளிடம் இராது. இதன் பயனுக மின்சார சக்தி ஏழைகளுக்கு உதவவேண்டியதுபோய் அவர்களைச் சுரண்டவே உத வும். நான் இவ்வாறு ஆவதை விரும்பவில்லை. வெளிச் சத்திற்கு மட்டுமே ஏழை, எளியோருக்கு மின்சார மளிக்கப்படுமானுல் அதன் விளைவாக மக்கள் இரவில் விழிக்க முயலுவார்கள்; இதனுல் கண்கள் கெடும்; தொந்தரவுகள் அதிகமாகும். ஏழை எளியோருக்கு அதனுல் விளையும் பயன் அனேகமாய் இல்லையென்றே சொல்லலாம். 'நாம் மலிவாய் மின்சாரமளிக்கிறோம். அதைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய முதலும் அளிக் கிறோம்' என்கிறுர்கள். அதாவது அது முதலுள்ளவர் களுக்குப் பயன்படும், ஏழைகளுக்குப் பயனில்லை என்று ஆகிறது. அதற்கு வேண்டிய சாதனங்களை எல்லோ ருக்கும் அளித்து எல்லோருமே அதை அனுபவிக்குமாறு செய்தால் அதன் பயன் எல்லோருக்கும் கிட்டும். நீங்

கள் இதற்கெல்லாம் சம்மதித்தால் நானும் மின்சாரத்தை உபயோகிக்கச் சம்மதிப்பேன். அதை நான் வரவேற்பேன். நான் விஞ்ஞானம் சிறந்தோங்க வேண்டுமென்றே விரும்புகிறேன். இதற்குக் காரணம் நான் அஹிம்சாவாதியாயிருப்பது, ஹிம்சாவாதியாய் இல்லாமை யல்ல.

ஹிம்சையும் விஞ்ஞானமும்

விஞ்ஞானமும் ஹிம்சையும் கூடுமாளுல் மனித இனம் முழுமையும் அழிந்துபோகும். ஆகையால் விஞ்ஞானமும் அஹிம்சையுமே சேரவேண்டும். அஹிம்சை-விஞ்ஞானக் கூட்டிளுல் மண்ணுலகம் விண்ணுலகாய் மாறும். ஹிம்சை-விஞ்ஞானக் கூட்டிளுலோ மனிதப் பூண்டே அற்றுப் போய்விடும். நமக்கு உதவியாயுள்ள எல்லாச் சாதனங்களையும் நாம் செய்துகொள்ளவே விரும்புகிறோம். ஆளுல் ஆகாய விமானம் வந்திருந்தும் கூட நான் கால் நடந்து செல்வதை நிறுத்தப்போவதில்லை; இஷ்டமான இடத்திற்குப் போய்க்கொண்டே தானிருப்பேன். மக்கள் இக்காலத்தில் நடந்துபோவதையே நிறுத்திவிட்டார்கள். ஏன் என்று கேட்டால் இதளுல் நேரம் மிச்சமாகிறது என்கிறூர்கள். ஐந்து மைல், பத்து மைல் என்ருல் நடந்தே தான் போக வேண்டும், வெகு தொலைவு போக வேண்டி வந்தால் அதற்கு வாகனம் ஏதேனும் உபயோகித்துக்கொள்ளலாமென்பது என் அபிப்பிராயம். 'நீங்கள் நேரத்தை மிச்சப்படுத்தப் பார்க்கிறீர்களா? உங்களுக்குச் சிரமமில்லாமல் செய்துகொள்ள விரும்புகிறீர்களா?' என்று நான் கேட்கிறேன். சிலர், 'நாங்கள் நடக்கமாட்டோம், மோட்டாரில் போய் வேலையை விரைவில் முடிப்பதென்று தீர்மானித்திருக்கிறோம். முன்பெல்லாம் ஐந்து வருஷம் பிடித்த ஒரு காரியத்தை ஐந்து நிமிஷத்தில் முடித்து விடுவோம்' என்கிறூர்கள். இத்தகையவர்களிடம் நான்

சொல்லுவது : 'கடவுளும் நானும் இதைத்தான் விரும்புகிறோம். ஆகையால் நூறு வருஷம் ஜீவிப்பதற்குப் பதிலாக ஐம்பது வருஷத்திலேயே எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு இங்கிருந்து கிளம்பிவிடு என்று சொன்னால் உங்களுக்குச் சம்மதமாகுமா?' கடவுளின் ஏற்பாடு ஒருவன் எப்படி நடந்து கொள்ளுகிறானோ அப்படியே அவனிடம் நடந்து கொள்வது. ஆகையால் நீண்ட காலம் உயிர் வாழும் பொருட்டு நாம் இரவில் சினிமாவுக்குப் போகக் கூடாது, பள்ளிக்கு நடந்தே செல்ல வேண்டும், துணியை வண்ணானுக்குப் போடக்கூடாது, இரவில் குழப்பமின்றி ஆழ்ந்து தூங்கவேண்டும். விஞ்ஞானமும், அஹிம்சையும், அறிவும் வளரவேண்டு மென்பதே என் விருப்பம். அஹிம்சையும் அறிவும் சேர்ந்ததே ஆத்மஞானமென்பது. இந்த ஆத்மஞானத்துடன் விஞ்ஞானமும் கலந்து விடவேண்டும்.

நடிப்பின் பயன்

ஒரு தந்தை. அவர் எங்கும் சைக்கிளில்தான் போவார். அவர் மகனும் அவரைப்போலவே செய்யத் தொடங்கி விட்டான். நடந்தே போகுமாறு எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. அப்பொழுது தந்தை, 'நீ என்ன எப்பொழுது பார்த்தாலும் இப்படிச் செய்கிறாய்? கடவுள் கொடுத்த இக் கால்கள் எதற்கு?' என்று கேட்டார். பையன், 'சைக்கிள் விடுவதற்கு' என்று பதில் சொன்னான். 'காலுக்குப் பதில் சைக்கிளென்று நீ வைத்துக் கொண்டால் எப்படிச் சரியாகும்?' என்று தந்தை கேட்டார். காலால் போகவேண்டிய இடத்திற்குக் காலாலும், சைக்கிளில் போகவேண்டிய இடத்திற்கு சைக்கிளிலும், ஆகாய விமானத்தில் போகவேண்டிய இடத்திற்கு ஆகாய விமானத்திலும், மோட்டாரில் போக வேண்டிய இடத்திற்கு மோட்டாரிலும் போகவேண்டு மென்று நான் சொல்லுகிறேன்.

பலர் என்னிடம் நீங்கள் ஏன் பூமியில் சுற்றுகிறீர்கள் என்று கேட்கிருர்கள். நான் அவர்களுக்கு, 'நான் காற்றில் பறந்தால் எனக்கும் காற்றுதான் கிடைக்கும். பூமியில் நடப்பதால் பூமி கிடைக்கிறது. இதுதான் அறிவு என்பது. சிலர், 'கால் நடந்து போவதனல் என்ன ஆகிறது?' என்று கேட்கிருர்கள். நான், 'எந்தக் காரியத்திற்கு எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்கிறேன். எனக்கு மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். நான் அவர்களின் நிலேயைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காகவே நான் அதிகமாய் நடந்தே போகிறேன், அதனுல் மக்களின் அன்பைப் பெறுகிறேன். அதன் விளேவாக நிலமும் கிடைக்கிறது. அன்பாய் அளிக்கப்படும் நிலமே எனக்கு வேண்டும்; அன்பில்லாதது வேண்டாம்' என்கிறேன்.

சாதனங்களின் தக்க உபயோகம்

எக் கருவியை எவ்வாறு பயன் படுத்த வேண்டும் என்பதை நாம் அறியவேண்டும். உபகரணங்களுக்கு நம் பொறிகளேவிட அதிகச் சிறப்பளித்து விடக்கூடாது. கால்களே விட சைக்கிளுக்கும், கண்களிலும்பார்க்க மூக்குக் கண்ணுடிக்கும் அதிகச் சிறப்பு ஏற்பட்டுவிட்டால் அது எப்படிச் சரியாகும்? மூக்குக் கண்ணுடிக்கு மதிப்பளிக்க வேண்டியதே. ஆனுல் அது அதற்குரிய இடத்தில் வைக்கப்பட வேண்டும். 'இவர் படித்து வித்துவானுகி விட்டார். இப்பொழுது நம் கண்ணுடியை அகற்றி நம்மைப் படிக்காதிருக்கச் செய்யப் பார்க்கிருர்' என்று எண்ணுதீர்கள். கண்ணுடி அணியாதிருத்தல் நல்லதே. ஒரு தந்தை. அவருக்கு ஒரு பிள்ளே. தந்தை கண்ணுடி அணிந்துகொண்டு படிப்பார். பிள்ளேக்கும் படிக்க வேண்டுமென்று தோன்றிற்று. அவனுக்குப் படிக்கத் தெரியாது. ஆயினும் ஒரு நாள் அப்பாவின் கண்ணுடியை எடுத்து மாட்டிக்கொண்டு படிக்கப் பார்த்

தான். வெறுங் கண்ணுல் படிக்க முடியாது என்பது அவன் எண்ணம்! எனவே எக் கருவியை எவ்வாறு உபயோகிப்பது என்பதை அறியும் பகுத்தறிவு நமக்கு வேண்டும்.

பலர், 'நீங்கள் ஏன் 'டிராக்டர்' உபயோகிப்பதில்லை?' என்று கேட்கிருர்கள். அதில் இரண்டு பெருங் குறைகள் உள்ளன. நாம் வயலில் சோளம் விதைத்தால் அதிலிருந்து சோளமும் தட்டையும் கிடைக்கின்றன. உங்கள் டிராக்டர் தட்டையைத் தின்பதுமில்லை, உரத்திற்கு வேண்டிய சாணம் போடுவதுமில்லை. என் மாடோ இவ்விரண்டையும் செய்கிறது. உங்கள் டிராக்டருக்கு 'மொபிலாயில்' வேண்டும். அதோடு எங்கள் வயலுக்கு வேண்டிய உரத்திற்கு நாங்கள் சிந்திரியின் தயவுக்குக் காத்திருக்க வேண்டி வருகிறது. இதைத் தவிர டிராக்டர் இந்தியாவில் தயாரிப்பதில்லை. அதற்கு விலையும் அதிகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அமெரிக்கர்கள் அறிவாளிகளாகையால் டிராக்டரை உபயோகிக்கிருர்கள், நாமோ முட்டாள் தனத்திஞல் டிராக்டர் உபயோகிக்கிறோம். அமெரிக்காவில் ஒரு மனிதனுக்குச் சராசரி பன்னிரண்டு ஏக்கர் நிலமிருக்கிறது. இங்கோ ஒரு மனிதனுக்குள்ள நிலம் அரை ஏக்கருக்கும் குறைவு. நான் இப்பொழுதுதான் கீழ்-மேல் கோதாவரி ஜில்லாக்களில் சுற்றி வந்தேன். அங்கே ஒரு சதுர மைலுக்கு பதினைந்தாயிரம் வீதம் ஜனத்தொகை உளது. இம்மாதிரியான இடத்தில் கையிஞலேயே தான் விவசாயம் செய்யவேண்டும். நிலம் அதிகமாயுள்ள நிலத்தில் டிராக்டரையும் குறைவாயுள்ள நிலத்தில் மாட்டையும் உபயோகிக்க வேண்டும்.

இன்னொரு விஷயம். அமெரிக்கர்கள் டிராக்டர் உபயோகிக்கிருர்களென்ருல் நாங்கள் பசுவைப் பாலுக்காக வைத்துக் கொள்ளுவோம், எருதைக் கொன்று தின்போம் என்றும் சொல்லுகிருர்கள். நீங்களோ எரு

தைத் தின்னச் சம்மதிக்க மாட்டீர்களே! அதோடு பசுப் பாதுகாப்பென்ற முட்டாள்த்தனமும் செய்திருக்கிறீர்களே! ஆனால் டிராக்டரும் வேண்டுமென்கிறீர்கள். டிராக்டர் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதோடுகூட எருதுகளைக் கொன்று தின்னவும் நீங்கள் ஆரம்பித்து விடவேண்டும். இல்லையேல் பேராபத்தாகிவிடும். டிராக்டருக்கு வேறு, எருதுகளுக்கு வேறு என்று இரட்டிப்புச் செலவு செய்ய நேரும். ஆகையால் அமெரிக்காவின் டிராக்டர் போன்ற சாதனங்கள் காடுகளை வெட்டிப் பண்படுத்தவே நம் நாட்டில் பயன்படும். எனக்கு டிராக்டரிடம் பிடித்தமே யன்றி அப்படி வெறுப்பொன்று மில்லை.

இயந்திரம் நம் கையிலிருக்க வேண்டும்

நாம் வெறுப்புக் காட்ட வேண்டிய அளவுக்கு எந்த இயந்திரத்திற்கும் சக்தி யுண்டென்று நான் நினைக்கவில்லை. இயந்திரம் ஆற்றலற்றது. ஆனால் அதை உபயோகிக்க வேண்டிய இடத்தில் மட்டுமே உபயோகியுங்கள். ஒரு நாட்டிற்குச் சஞ்சீவியாய் உதவும் அதே இயந்திரம் இன்னொரு நாட்டிற்கு விஷமாகலாம். ஒரு நாட்டில் ஒரு காலத்தில் பேருதவி அளித்த ஓர் இயந்திரம் இன்னொரு காலத்தில் மிகவும் தீங்கு விளைவிப்பதாய் இருக்கிறது. இவ்வம்சத்தைக் கருத்தில் கொண்டு நாம் கருவிகளை, சாதனங்களைப் பயன்படுத்துதல் நலம். அவைகளைச் சிருஷ்டிக்கு உதவுமாறு கையாளவேண்டும்.

நாம் உணவை மிகவும் பெருக்கவேண்டும். நான் இவ்வாறு சொல்வது நவீனப் பொருளாதார சாத்திரப்படி யல்ல. உப நிஷத்தில் यया कया च विद्यया अन्नं बहु प्राप्नुयात् (யயா கயா ச வித்யயா அன்னம் பஹுப்ராப்னுயாத்) 'எந்த முறையினாலாவது பேரளவில் உணவைப் பெருக்குங்கள்' என்று சொல்லியிருக்கிறது. திட்டக் கமிஷன் காரர்களிடம் நாம் ஒரு வெற்றுக் காகிதத்தைக் கொடுத்து விட்டோம். எவ்வகையிலேனும்

உணவைப் பெருக்க வேண்டும் என்பது நம் பெரியோர் கட்டளை. எனக்கு இயந்திரத்தினிடம் பயமில்லை. இயந்திரம் நம் கையில் இருக்க வேண்டுமே யல்லாது நாம் அதனிடம் சிக்கிவிடக் கூடாது என்பதே என் விருப்பம்.

உழைப்பின் பாகுபாடு

சிலர் ஒரு தத்துவம் கண்டுபிடித்திருக்கிறுர்கள். அதை அவர்கள் தொழில் பாகுபாடு என்கிறுர்கள். 'ஒரு மனிதன் பத்து, இருபது காரியங்கள் செய்வானுயின் அவனது வேகமும் திறமையும் பெருகாது. ஆகையால் ஒரு மனிதன் ஆயுள் முழுமையும் ஒரே வேலையைச் செய்ய நேர்ந்தால் அவன் அதில் திறமை பெறுவான்' என்று அவர்கள் சொல்லுகிறுர்கள். நான் சிறையிலிருந்த பொழுது திறமை மிக்க தொழிலாளி ஒருவர் என்னுடன் இருந்தார். நான் சாப்பிடும் ரொட்டிகள் நிறுத்தாற்போல் அளவாய் இருப்பது வழக்கம். இத் தொழிலாளியிடம் 'என் ரொட்டி பத்து தோலா எடையுள்ளதாய் இருக்க வேண்டு'மென்று சொல்லப்பட்டது. இவர் இவ் வேலையை ஒன்றரை, இரண்டு வருஷம் செய்தார். அவர் என்ன செய்தார் தெரியுமா? பிசைந்து உருளையாய் உருட்டிய மாவைக் கையிலெடுத்து சிறு சிறு துண்டுகளாய்க் கிள்ளி தராசில் இட்டுக்கொண்டே போவார். அப்பொழுது அவர் தராசின் முள்ளைப் பார்க்கவே மாட்டார். ஏனெனில் அவர் கைக்கு அவ்வளவு பழக்கம் வந்திருந்தது. அவர் வாய் விஷ்ணு ஸஹஸ்ர நாமம் ஜபித்துக்கொண்டே யிருக்கும். நான் அவரை 'ஸஹஸ்ர நாம ஜபம் எதற்கு?' என்று கேட்டதற்கு, 'எனக்கு பத்து வருஷ தண்டனை. அது அவன் கிருபையால் குறையாதா?' என்றுர். 'நீர் தராசைப் பார்ப்பதேயில்லையே,' என்றதற்கு அவர் 'கைக்கு எடை பழகிப் போய்விட்டது. ஆயினும் விதிப்படி தராசில் வைக்கிறேன்' என்றுர்.

இதற்காக மனிதன் இயந்திரத்தின் கையில் அடங்கி யவனுக இருக்கக்கூடாதென்பது என் எண்ணம். அவன் இயந்திரத்தின் கையில் அடங்கிவிட்டால் வாழ்க்கையி லுள்ள இன்பம் போய்விடும். ஒருபுறம், பாவம் ஆட்க ளிடம் எட்டு மணி நேரம் வேலை வாங்கிவிட்டு மறுபுறம் இரவில் அவர்களுக்கு சினிமா காண்பிக்கிருர்கள். 'இதனுல் உங்களுக்கு இன்பமேற்படும்' என்கிருர்கள். அதாவது பகலில் அவர்களுக்கு அளிக்கப்படும் கஷ்டத் திற்கு ஈடாக இரவில் சுகம் 'சப்ளை' செய்யப்பட்டு விடுகிறது. இருபத்துநான்கு மணி நேரமும் இன்ப மிருக்க வேண்டும். ஏனெனில் துன்பமுறுதல் ஆன்மா வின் தன்மைக்கு மாருனது. ஆன்மாவின் தன்மை சச்சிதானந்தம்.

சிருஷ்டியுடன் அனைவருக்கும் தொடர்பு வேண்டும்

ஆகையால் சிருஷ்டியுடன் எல்லோருக்கும் தொடர் பிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இதுவே தலை சிறந்த இலட்சியச் சமூக அமைப்பு. ஒவ்வொரு மனித னும் நான்கு மணி நேரம் வயலில் வேலை செய்தால் சுத்த மான காற்றையும், சூரிய நாராயணரின் ஒளியையும் பூமிதேவிக்குப் பணி செய்வதால் வரும் இன்பத்தையும், பட்சிகளின் பாட்டைக் கேட்கும் ஆனந்தத்தையும் பெற்று அதனுல் உற்சாகமுறுவான். அதனுல் பிரம்ம சரியம் அனுஷ்டிப்பதும் சுலபமாகும். ஆகையால் எவருக்கும் விவசாயம் செய்ய வாய்ப்பளியாமை பாவ மாகும். எவனையும் கோயிலுக்குள் போகாமல் தடுத்தல் பாவமாவதைப் போல் விவசாயப் பணி அளியாமையும் பாவமே. விவசாயத்தில் ஆண்டவனுக்குப் பணிபுரியும் இன்பம் ஏற்படுகிறது. कृषि नित्यसस्पृह वित्ते रमस्य बहु अन्नमाना: (கிருஷி நித்யஸஸ்பிருஹ வித்தே ரமஸ்ய பஹு அன்னமாஞ:) வேத பகவானின் கட்டளை விவ சாயம் மட்டும் செய்து வந்து சிருஷ்டியிலிருந்து நமக்குக்

கிடைப்பதையே அதிகமென்று கொண்டு இருக்க வேண்டுமென்பது. ஆகையால் விவசாயம் ஒவ்வொருவருக்குமுள்ள கடமை என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும்.

ஒவ்வொருவரும் விவசாயம் செய்ய வேண்டும்

நான் எத்தனையோ வேலைகளைத் தொடர்ந்து எட்டு மணி நேரம் செய்திருக்கிறேன். நெசவையும் இன்னும் பல வேலைகளையும் வேகமாய்ச் செய்யப் பழகவேண்டுமென்றும், நுணுக்கங்களை ஆராய வேண்டுமென்றும் இவ்வாறு செய்து வந்ததுண்டு. ஆனால் ஒருவர் 'நீர் எட்டு மணி நேரம் ஒரே வேலையைச் செய்யும்' என்று என்னிடம் சொன்னால் நான் 'முடியாது' என்பேன். எட்டு மணி நேரம் உட்கார்ந்து இருக்கும் பொறுப்பை நான் ஏற்க விரும்பவில்லை. நான்கு மணி நேரம் வயல் வேலை, நான்கு மணி வேறு வேலை என்றிருக்க வேண்டும். எல்லாத் தொழிலாளிகளுமே விவசாயமும் செய்ய வேண்டுமென்பது என் திட்டம். அவர்கள் விவசாயமும் செய்யட்டும், பிற தொழில்களும் செய்யட்டும். இதுவே தலைசிறந்த லட்சிய சமூகத்தில் இருக்கவேண்டிய ஏற்பாடு. விவசாயம் தெரியாதவர்கள் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவருக்கு வேறு தொழிலில்லை, நிலமும் இல்லை; ஆனால் அவருக்கு விவசாயம் தெரியும்; அதைச் செய்யவும் விரும்புகிறார்; அத்தகையோருக்கு நிலமளிக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன். ஒவ்வொரு மனிதனும் விவசாயத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்பது என் திட்டம். நம் பிரதம மந்திரியும் நான்கு மணி விவசாயம் செய்வார். பிறகு நான்கு மணி வேறு வேலைகள் செய்வார் என்றெல்லாம் நான் எண்ணிக்கொள்கிறேன். என் திட்டத்தில் ஒருவர் விவசாயப் பிராம்மணர், இன்னொருவர் விவசாயப் பாட்டாளி, இன்னொருவர் விவ

சாயப் புரொபஸர், இன்னொருவர் விவசாயத் தச்சர், இன்னொருவர் விவசாய நெசவாளி என்றிருப்பார். இது நம் லட்சிய நிலை. சிருஷ்டியுடன் தொடர்பு கொண்டிருத்தல் நமது கடமை.

முதல் தர்மம்

எட்டு மணி நேரம் விவசாயம் செய்யத் தேவையில்லை. ஆனால் அதில் சிறிது நேரம் செலவிடுதல் மிகவும் அவசியம். பழச் செடிகள், மரங்கள், காய்கறி, கீரை ஆகியவை ஒவ்வொருவரும் பயிர் செய்தல் அவசியம். இவ்வகையில் நான் விவசாயத்தை முதல் தர்மம், முதல் கடமையென்று கருதுகிறேன். இக்கடமை எல்லோருக்கும் இருக்க வேண்டும். சிறு சிறு துண்டு நிலங்களாயிருந்தால் உற்பத்தி குறையும் என்று சிலர் சொல்லுகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுவது, 'உங்களுக்கு விவசாயம் என்றால் என்னவென்று தெரியாது. நான் அதை எத்தனையோ வருஷங்கள் செய்திருக்கிறேன். சிறு துண்டுகளாய் நிலமிருப்பதனால் உற்பத்தி எவ்வளவு பெருகுகிறது என்று எனக்குத் தெரியும். ஆகையால் ஒவ்வொரு மனிதனுக்கும் விவசாயத்திற்குச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும். சிலர் 'விவசாயம் செய்வோர் அதை எட்டு மணி நேரம் செய்யட்டும், பிற வேலைகள் செய்வோரும் அதே மாதிரி எட்டு மணி நேரம் செய்யட்டுமே' என்று எண்ணுகிறார்கள். இதனால் பயனொன்றும் இல்லை. சிருஷ்டிக்குப் பணி புரியும் வாய்ப்பு எவருக்கும் இல்லாது போவதை நான் விரும்பவில்லை.

ஆரோக்கியத்திற்கு ஏற்பாடு

மனிதனுக்கு மிகவும் தேவையானது ஆகாயம். ஆகாயத்தை எவ்வளவு உட்கொண்டாலும் அஜீர்ணமேற்படாது. மிகவும் தேவையாயுள்ள மற்றொரு

பொருள் காற்று. காற்றையும் மிகுதியாய் உட்கொள் வதனுல் புஷ்டியேற்படுகிறது. மூன்ருவதாக சூரிய ஒளி தேவை. நான்காவது தேவை தண்ணீர். எல்லாவற்றி லும் குறைவாய் மனிதனுக்குத் தேவையாயிருப்பது உணவு. ஆகையால் உணவைக் குறைவாய் உட்கொள் ளவும், பிற சூக்சும பூதங்களை அதிகமாய்க் கொள்ளவும் வேண்டும். அன்னத்தைக் குறைவாய்க் கொள்ளுதல் என்ருல் அதன் அளவு குறைக்கப்பட வேண்டும் என் பது பொருளல்ல. அதன் ஆற்றல் கூடியவரை குறைந் திருக்குமாறு அமைய வேண்டுமென்பதே கருத்து. ஆகையால் மானிட வாழ்க்கையின் அமைப்பில் காற்று, தண்ணீர், ஆகாயம் ஆகியவை மிகுதியாய்க் கிடைக்க இடமிருக்க வேண்டும். இவ்வாறு சிருஷ்டியுடன் தொடர்பு இருந்து இம்முறையும் கவனத்திலிருக்கு மாறுல் மனிதனது ஆரோக்கியம் சிறந்து விளங்கும். ஆரோக்கியத்திற்குத் தேவையான ஏற்பாடு சிருஷ்டியி லேயே அமைந்துளது. நாம் அதை உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

4. அரசாங்கம்

அரசாங்கம் மிகவும் பயங்கரமானது. அதையும் பார்க்க பயங்கரமானது வேறில்லை. இன்றுள்ளது போன்ற பலமிக்க அரசாங்கம் உலகில் எப்பொழுதுமே இருந்ததில்லை. அரசாங்கத்தை நடத்துவோர் மக்களின் நலனுக்காக மக்களே தமக்கு அதிகாரம் தந்திருப்பதாய்ச் சொல்லுகிறார்கள். சமூகத்தில் செய்யப்பட்டுள்ள வரையறைகள், நிர்ப்பந்தங்கள் காரணமாக எல்லா மக்களின் அதிகாரத்தையும் ஒரு சிலர் தம் கையில் அடக்கி வைத்துக் கொண்டு விட்டார்கள். இன்று உலகம் முழுமையும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறது. நாடுகளின் பிரதிநிதிகள் அவற்றின் நன்மை, தீமைகளை எண்ணிப் பார்க்கும் அதிகாரத்தைத் தம்மிடமே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மக்களோ திறனற்று ஆற்றலற்று இவர்கள் இல்லையேல் எங்கள் காரியங்கள் எப்படி நடக்கும் என்று சொல்லும் பரிதாப நிலையில் உள்ளார்கள். பொது மக்களுக்குப் பெயரளவில் ஓட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் அவ்வதிகாரத்திற்கும் மந்தையிலுள்ள ஆடுகளுக்கு தம்மை மேய்க்கும் இடையனைத் தேர்ந்து கொள்வதற்கு உள்ள அதிகாரத்திற்கும் வேற்றுமையில்லை. அதனால் ஆடுகளின் நிலைமை எவ்வகையிலும் மாறுவதில்லை. இவ்வாறு நாடகம் நடந்துகொண்டே இருக்கிறது. அதிகாரமெல்லாம் அரசாங்கத்தினிடம் குவிக்கப் பெற்று வருகிறது.

அறிவுச் சுதந்திரத்திற்கு ஆபத்து

ரஷ்யாவிலும் இன்று நடப்பது இதுவே. குடிகளுக்கு எவ்வளவு நல்ல உணவு அளிக்க வேண்டுமென்பதை அரசாங்கம் முடிவு செய்கிறது. எவ்வளவு உணவு கிடைக்கவேண்டும் என்பது முக்கிய விஷயமல்ல, அறிவுச் சுதந்திரமே முக்கியம். மக்களின் அறிவை

அரசாங்கம் கட்டுப்படுத்துகிறது. எந்தப் பெரிய ஞானியினிடமும் இதுவரை இல்லாத கட்டுப்படுத்தும் அதிகாரம் இன்று கல்வி இலாகாவின் கையில் இருக்கிறது. ஞானிகள் உபநிடதங்களை வரைந்தார்கள். ஆனால் அவர்களின் புத்தகங்களையே ஓதவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இருந்ததில்லை. ஆனால் கல்வி இலாகா இன்று தீர்மானிக்கும் புத்தகத்தையே எல்லா மாணவர்களும் படிக்கவும், அதிலேயே பரீட்சை எழுதவும் வேண்டியிருக்கிறது. பாஸிஸ்ட் அரசாங்கமானால் பாஸிஸ்ட் கருத்துக்கள் கொண்ட புத்தகங்களே மாணவர்களுக்குக் கிடைக்கும். முதலாளித்துவ சமூகத்தில் முதலாளித்துவக் கருத்துக்களுள்ள புத்தகங்களையே மாணவர் படிக்கவேண்டியிருக்கும். கம்யூனிஸ்ட் அரசாங்கத்திலோ அவர்களின் தத்துவங்களை மாணவர்கள் ஓதியாக வேண்டும். ஒவ்வொரு அரசாங்கமும் தன் கருத்துக்களை மாணவர்களுக்குப் புகட்டுகிறது. கூடியவரை அதிகச் சுதந்திரத்திற்கு உரிமையுள்ள பிள்ளைகளின் அறிவில் அவரவர் தாம் கொண்டுள்ள கருத்துக்களைத் திணிக்கப் பார்க்கிறார்கள்.

மற்றவர்களிலும் பார்க்க மாணவர்களுக்கு சுதந்திரத்திற்கு அதிக உரிமையுண்டு. 'அறிவு பெறுவதில் நீங்கள் நிர்ப்பந்த மெதுவும் செய்யாதீர்கள். எங்களுக்குச் சரியென்று தோன்றுவதையே நாங்கள் படிப்போம்' என்று அவர்கள் சொல்லலாம். பண்டைக்கால ரிஷி, 'यानि अस्माकं सुचरितानि तानि सेवितव्यानि, नो इतराणि (யானி அஸ்மாகம் ஸுசரிதானி தானி ஸேவிதவ்யானி, நோ இதராணி) எம்மிடமுள்ள நல்ல விஷயங்களைப் பின்பற்று. தீயவைகளை ஒதுக்கு' என்று சொன்னார். ஆனால் இக்காலத்திலோ கட்டுப்பாடும் ஒழுங்குமே குணங்களுள் சிறந்தவையாய் மதிக்கப்படுகின்றன.

இக்காலத்தில் மாணவர்களிடையே கட்டுப்பாடும்

ஒழுங்கும் குறைந்துவிட்டதாய்க் குறை கூறுகிறார்கள். எனக்கோ இவ்வளவு மோசமான கல்வியிலும் மாண வர்கள் இவ்வளவு கட்டுக்கடங்கி நடப்பதைக் காண வியப்பாயிருக்கிறது. எனக்கு நினைவிருக்கிறது. நான் கல்லூரியில் படித்த காலத்தில் ஒரு பேராசிரியரின் போதனை எனக்கு அவ்வளவு பிடிப்பதில்லை. இவர் போதனையினால் எனக்குப் பயனொன்றும் இல்லையென்றால் நான் அவர் வகுப்புக்கு ஏன் போகவேண்டுமென்று தோன்றும். அதனால் நான் வகுப்பை விட்டுப் போய் விடுவேன்.

மோசமான கல்வி

இன்று மாணவர்களுக்குப் போதிக்கப்படும் இலக் கியத்தினால் அவர்களுக்கு ஒரு பயனுமில்லை. ஸம்ஸ் கிருதம் கற்றுக்கொடுக்கிறார்களென்றால் அதில் அவர்கள் கற்றுக்கொடுப்பது காதல் சுவை மலிந்த புத்தகங்களே. கீதையோ, உபநிஷத்துக்களோ கற்பிப்பதில்லை. அங்கே மாணவர்கள் சினிமா பார்த்துக் கொண்டே யிருக் கிறார்கள். இந்தியாவின் தலைநகரான தில்லி போன்ற நகரில் சகோதரிகள் அரசாங்கத்திடம், 'எங்கள் குழந்தை களைக் கெடுக்காதீர்கள். அவர்களின் நடத்தை, அவர் களின் மனம் சினிமாவினால் கெடுகிறது. ஆகையால் சினிமாவை நிறுத்துங்கள்' என்று வேண்டிக்கொண் டார்கள். இவ்வாறு வேண்டிக்கொள்ள வேண்டிய நிலை நம் சகோதரிகளுக்கு ஏற்பட்டிருப்பது நாம் வெட்கப்பட வேண்டிய விஷயம். இவையெல்லாம் நடக்குமிடத்தில் மாணவர்கள் ஒழுங்காய் எப்படியிருப்பார்கள்? 'இக் கல்வியைக் கற்றுத்தானே மகாத்மா காந்தியும் திலகரும் உருவானார்கள். இதை ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்?' என்று கேட்கிறார்கள். இக்கல்வி பெரும் தடையா யிருந்தும் இதையும் மீறி அவர்களுக்கிருந்த தெய்வ அனுக்கிரகத்தால் அவர்கள் உருவானார்களேயன்றி

அவர்களை இக்கல்வி உருவாக்கவில்லை என்று நான் சொல்லுகிறேன். அவர்களே இப்படித்தான் சொன்னார்கள். ஆயினும் அவர்கள் பெயரைச் சொல்லிச்சொல்லி இந்த மோசமான கல்வி அளிக்கப்பட்டுவருகிறது. இவ்வளவு மட்டமான கல்வி அளிக்கப்படும் பொழுதும் மாணவர் இவ்வளவு அமைதியாய் எப்படி இருக்கிறார்களென்று நான் ஆச்சரியப்படுகிறேன். கடந்த நாலரை வருஷ அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். நம் கூட்டங்களில் மாணவர்கள் தொகை அதிகமாகவாக அமைதியும் அதிகம் நிலவிவருகிறது. ஆகையால் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடத்தல், அத்துமீறாமை என்பது சிறந்த குணமல்ல. ஏனெனில், அதில் ஒரு மனிதன் ஏவுகிறபடி எல்லோரும் நடக்கவேண்டி யிருக்கிறது. 'தாக்குங்கள்!' என்று சொன்னதும் எல்லோரும் தாக்கக் கிளம்பிவிடுகிறார்கள். இது ஒரு நல்ல குணமா? நமது ரிஷி முனிவர்கள் ஆண்டவனின் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். குரு நானக், 'ஆண்டவனின் கட்டளையைத் தவிர நானக் சொல்லுவது ஒன்றுமில்லை' என்று கூறியிருக்கிறார். ஆனால் இவர்களோ இன்று கடவுளுக்குப் பதிலாக அரசாங்கத்தை, அதன் கட்டளையை ஏற்க வேண்டுமென்கிறார்கள். இவர்கள் ஏற்றுள்ள சிறந்த உபநிஷத வாக்கியம்—

> " Yours not to question why,
> Yours but to do and die "
> (நீ செய்யவும் சாகவுமே வேண்டும்
> ஏன் எதற்கு எனக் கேட்டல் கூடாது)

என்பது. இதுவே அவர்களது முறை. 'தந்தையை சுடு' என்று உத்தரவு பிறந்ததும் மகன் தந்தையைச் சுட்டு வீழ்த்துகிறான். இதற்குத்தான் ஒழுங்கு, கட்டுப்பாடு என்று பெயர். இத்தகைய ஒழுங்கு முறையினால் நாட்டிற்கு என்ன நன்மையோ! அரசாங்கம் நாட்டின்

மாணவரனைவருக்கும் இத்தகைய கல்வி அளித்துவரு கிறது. இவ்வரசாங்கங்களிடமிருந்து நாம் விடுபடும் வரை உலகில் அமைதி நிலவாது.

அரசாங்கத்தை 'சமாப்தி' செய்யுங்கள்

கம்யூனிஸ்டுகள், 'இறுதியில் அரசாங்கம் தேய்ந்து கரைந்து நீங்கிவிட வேண்டும். ஆனால் இப்பொழுது அது கொழுத்துப் பருக்க வேண்டும்' என்கிறார்கள். அதாவது தேய்தல், கரைதல் என்றால் கடன்; கொழுத்துப் பருத்தல் என்றால் ரொக்க வியாபாரம்! இன்றைய நிலையில் அரசாங்கத்தை வலுவாக்க வேண்டுமென்றால் அடிமைத்தனத்தைத் தவிர வேறெதுவும் விளையாது. ஆகையால் இன்றுமுதலே அரசாங்கம் தேய்ந்துவர வேண்டுமென்பது சர்வோதயத்தின் கருத்து.

தனி மனிதர்களைப் பற்றியவரை ஒவ்வொரு வருக்கும் தம் மனத்தையும் பொறிகளையும் அடக்கும் அறிவு இருத்தல் வேண்டும். சமூகத்தில் ஒருவர் நல னுக்கும் இன்னொருவர் நலனுக்கும் முரண் எதுவுமில்லை என்பதை உணர்ந்து சமூக அமைப்பை உருவாக்க வேண்டும். அரசாங்கம் அறவே தேவையில்லை என் பதை உணர்ந்து இப்பொழுது முதலே அதை அகற்றத் தொடங்கிவிட வேண்டும்.

அதிருப்தியின் தூண்டுதல்

உலகில் எங்கு நோக்கினும் கலகமும் குழப்பமுமாய் இருப்பது பெரு மகிழ்ச்சிக்குரிய விஷயம். எல்லா நாடு களிலும் அமைதியின்மைத் தீ பற்றி வருவதைப் பார்க் கிறோம். அதிருப்தியில் சிந்தனையைத் தூண்டும் பேராற்றல் உளது. அதிருப்தியுள்ள இடத்தில் ஜீவசக்தி தோன்றும். கல்லின் மீது மழை பொழிந்தால் அதற்கு அது லட்சியமில்லை. அதைப் பிளந்து சிதைத்தாலும் அது கவலைப்படாது. அதற்கு வாழ்க்கையில் அதிருப்

தியோ அமைதிக் குறைவோ, துன்பமோ இல்லை. உங்களை நான், 'நீங்கள் கல்லாக மாற விரும்புவீர்களா?' என்று கேட்டால் நீங்கள் கல்லாயிருந்து பார்த்திருக்கிறீர்களா? கல்லின் வாழ்க்கையில் அதிருப்தியோ அமைதிக் குறைவோ இல்லையென்று உங்களுக்கு எப்படித் தெரியுமென்று பதிலுக்குக் கேட்டுவிடுவீர்கள். உங்களது இக் கேள்விக்கு என்னிடம் பதிலில்லை. ஆனால் ஒரு நிலையில் துன்பமுமில்லை, இன்பமுமில்லையென்றால் எனக்கு அந்நிலையே வேண்டாமென்றே சொல்வேன்.

பரந்த சிந்தனை

உலகில் இன்றுள்ளது போன்று துன்பமும், அமைதிக் குறைவும் அதிருப்தியும் என்றும் இருந்ததில்லை என்கிறார்கள். இது உண்மையாயிருக்கலாம். ஆனால் இன்று நடப்பது போன்று பரந்த அளவில் உலகில் சிந்தனையும் இதற்குமுன் நடந்ததில்லை. மனித சமூகம் எவ்வாறு உருவாயிற்று என்பது பற்றி இன்று குழந்தைகளும் சிந்திக்கிறார்கள். ஒருவர் 'காபிடல்' (Capital) போன்ற பெரிய பெரிய நூல்களைப் படிக்கிறார். இன்னொருவர் மகாபாரதம் படிக்கிறார். ஒருவர் சர்வோதயத் தத்துவத்தை ஆராய, இன்னொருவர் சோஷலிஸத் தத்துவங்கள் குறித்துச் சிந்திக்கிறார். உலகில் முக்கியமான விஷயமென்ன, அகில உலகிலும் அமைதி எப்படி நிலவும், அரசாங்கங்கள், ஆட்சி முறைகள் எவ்வாறு முற்றுப்பெறும் என்னும் விவாதங்கள் நடக்கின்றன. உலகனைத்தையும் ஒன்றாக்கி ஒரே ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது போன்ற பரந்த கருத்துக் குறித்துச் சிறு குழந்தைகளும் சிந்திக்கிறார்கள், ஆராய்கிறார்கள். பண்டைக் காலத்திய பெரிய தத்துவஞானிகளும் ஒரு முடிவுக்கு வர இயலாத பிரச்னைகளுக்கு தற்காலக் குழந்தைகள் முடிவு கூறிவிடுகிறார்கள்.

பெண்டிர்மீது ஆடவரின் ஆதிக்கம்

மகாபாரதத்தின் ஒரு கதை. திரௌபதி மக்கள் நிறைந்த சபையில் இழுத்துவரப்பட்டாள். அவள், 'சூதாட்டத்தில் பெண்ணை, மனைவியை பணயம் வைக்கலாமா? மனைவி கணவனுடைய சொத்தா, உடைமையா?' என்று கேட்கிறாள். நம் குழந்தைகளும் இது ஒரு பெரிய கேள்வியா என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் இக் கேள்விக்கு பீஷ்மர், துரோணர் ஆகியோராலும் பதில் கூற முடியவில்லை. பீஷ்மர், துரோணர், விதுரர் ஆகியோர் பதில் சொல்ல முடியாமல் திணறித் தவித்தார்கள். பீஷ்மரும் துரோணரும் பேரறிவாளிகள். ஆனால் 'மனைவி கணவனின் சொந்தச் சொத்தா, அல்லவா?' என்ற கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. இதற்கு விடை கூறுதல் அவர்களுக்குச் சிரமமாயிருந்தது.

நாம் இவ்வாறு பார்க்கையில் நம் காலத்தில் எவ்வளவு பரந்த சிந்தனை நடைபெறுகிறது என்பது தெரிகிறது. பழைய காலத்தில் மிகவும் சிறு பிரச்னைகள் குறித்துச் சிந்திக்கப்பட்டு வந்தது. ஆயினும் அக்காலத்தவர்களால் அவைகளுக்கு முடிவெதுவும் காண இயலவில்லை. இவ்வாறு எண்ணும்பொழுது நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பது தெரியவரும். அக்காலத்தில் சூதாட்டம் தர்மமெனக் கருதப்பட்டது. இன்று நம் குழந்தைகளும், 'சூதாட்டம் தர்மமாவது?' என்று கேட்கிறார்கள்.

அக்காலத்திலோ ஒருவர் சூதாட அழைத்தால் போக மறுத்தல் க்ஷத்திரியனுக்கு அதர்மம் என்று சொல்லி வந்தார்கள். தர்மராஜர் சூதாட அழைக்கப்பட்டபொழுது மகாதர்மிஷ்டரான அவ்வரசர் தம் தர்மத்தைக் காக்கும் பொருட்டே அழைப்பை ஏற்றுக் கொண்டாராம். நான் அப்பெரிய ஞானியைப் பரிகாசம் செய்ய விரும்பவில்லை. அவர் வாழ்ந்த காலம் வேறு, அக்காலத்திய பிரச்னைகள்

வேறு. இன்று நாம் அதிக ஞானம் பெற்றுள்ளோம்; நமக்கு அதிக விளக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் காலத்திற்கு எத்தனையோ நூற்றுண்டுகளுக்குப் பின் நாம் வந்திருப்பதே. நாம் அவர் தோளின் மீது ஏறி நின்றுகொண்டு பார்ப்பதனுல் அவரைவிட அதிகத் தொலைவு நம்மால் பார்க்க இயலுகிறது. தந்தையின் தோளின்மீது மகன் உட்கார்ந்தால் அவனுல் தந்தையைவிட அதிகத் தொலைவு பார்க்க முடிகிறது. பீஷ்மராலும் துரோணராலும் முடிவுசெய்ய இயலாத பிரச்னைகளுக்கு நாம் முடிவு கண்டு விடுகிறோம். இதன் பொருள் நமக்கு அவர்களைவிட அதிக அறிவு இருக்கிறது என்பதல்ல, இன்றைய சமூகம் அக்காலத்திய சமூகத்தைவிடச் சிந்தனையில் பெரிதும் முன்னேறியுள்ளது என்பதே பொருள்.

மோதலல்ல, ஆய்வு

இன்றைய பிரச்னைகள் பரந்து உலகம் முழுவதையும் சம்பந்தப் படுத்துவனவாய் உள்ளன. பூகோளம் சொல்லிக் கொடுப்பதென்ருல் ஒரே உருண்டையில் அகில உலகின் படம் வரையப்படுகிறது. பழைய காலத்திய சக்கரவர்த்திக்கு உலகத்தில் எத்தனை தேசமுண்டு என்பதே தெரியாது. ஆகையால் இன்று நடக்கும் சிறு சச்சரவுகள் குறித்து நாம் வருந்தத் தேவையில்லை. இம் மோதல்கள் உண்மையில் ஆய்வுகள், தயிரைக் கடைதல் போன்றவையே. இரு மரத்துண்டுகளின் உராய்விஞல் தீப்பொறி தோன்றுகிறது. அத்தீப்பொறி பெருகி அவ்விரண்டையும் எரித்துச் சாம்பலாக்கக் கூடும். இதே வகையில் மோதல்கள் அழிவிற் போய் முடிகின்றன. ஆனுல் தயிரைக் கடைவதனுலோ வெண்ணெய் தோன்றுகிறது. சிலர் என்னை, 'நீங்கள் மோதல் தத்துவத்தை ஏற்கிறீர்களா?' என்று கேட்கையில் நான் 'ஏற்கவில்லை' என்று சொல்லுகிறேன்.

அப்படியானால் இருப்பவையெல்லாம் அப்படியே யிருந்து வருவது உங்களுக்குச் சம்மதமா என்று கேட்டால் 'நான் மோதல் தத்துவத்தை ஒப்பவில்லை. ஆய்வு, அல்லது கடைதல் தத்துவத்தை ஏற்கிறேன்' என்று சொல்லுகிறேன். கருத்துப் பற்றிய கடைதல், ஆய்வு நடக்கையில் முடிவு, தீர்மானம் என்ற வெண்ணெய் அதிலிருந்து விளைகிறது. இவ்வாறு உலகம் தீர்மானத்தை அணுகுகிறது.

அஹிம்சை முறையினால் அமைதி

புல்கானின் இந்தியாவில் சுற்றிவிட்டுச் சென்றார். தாம் 'மார்ஷல்' என்ற பட்டத்துடன் சேர்த்து அழைக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. அவர் மார்ஷல் பதவியுள்ளவர்தாம். ஆனால் மார்ஷல் எனப்படுதல் அவருக்குப் பிடிக்கவில்லை. மார்ஷல் எனப்படுதலே வெட்கப்படுவதற்குரியதாகி விட்டது என்பது தெரிந்த விஷயம். உலகில் மற்றெல்லாரிலும் ஹிம்சைக்கு வேண்டிய சாதனங்கள் அதிகம் வைத்துள்ளவர்களே அமைதியை விரும்புகிறார்கள். இன்றுவரை அமைதியை பிராம்மணர்கள் பிரகடனம் செய்து வந்தார்கள். ஆனால் இன்றோ உலகிலேயே மிகவும் அதிகச் சக்தி படைத்த நாட்டார் 'அமைதி அமைதி' என்று ஜபம் செய்து கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தி மரணங்குறித்து உலகமே கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தது. அப்பொழுது மெக் ஆர்தர்—அன்று அமெரிக்க சேனாதிபதி—'உலகில் அமைதி நிலவவேண்டுமானால் இன்றில்லாவிட்டால் நாளை மகாத்மா காந்தி காட்டியுள்ள வழியில் உலகம் சென்றேயாக வேண்டும்' என்று சொன்னார். இவ்வளவு பெரிய வீரரான மெக் ஆர்தர் காந்திஜியின் மரணங்குறித்து இவ்வாறு பேசினாரென்றால் அதன் பொருளென்ன? இன்று நம் மனத்தில் இன்றில்லையேல்

நாளை உலகம் அஹிம்சை வழியில் சென்றேயாகவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டது என்பதே.

இன்றில்லையேல் நாளை

இன்று நமக்கு எவரும் பூதானத்தில் நிலமளிக்காவிடில், 'அவர் நாளை கொடுக்கப் போவதால் இன்று கொடுக்கவில்லை' என்று நான் சொல்லுகிறேன். இன்று ஒருவர் கொடுத்தால் அவர் இன்று கொடுத்தவரென்று நாம் மகிழ்கிறோம். இன்று கொடுக்காதவர் நாளை கொடுக்க இருப்பவர். இரண்டு பேர் விஷயத்திலும் எனக்கு மகிழ்ச்சியே. இவ்வாறே இன்று ஒருவர் அமைதி பற்றிப் பேசினால் அவர் இன்றைய அமைதி வாதியாக, இன்று குழப்பம் பற்றிப் பேசுபவர் நாளைய அமைதிவாதியாகிறார். இருவரும் கோருவது அமைதியே. இன்று நம்மை ஆதரிக்காதவர் நாளை நிச்சயம் ஆதரிப்பாரென்று எனக்குத் தெரியும்.

ஹிம்சையின் பரந்த உருவம்

பழைய காலத்தில் ஏதேனும் பிரச்னை யெழுந்த பொழுது அதில் சம்பந்தப்பட்டவர்கள் மற்போர் புரிந்து அதைத் தீர்த்துக் கொண்டார்கள். குறிப்பிட்ட ஒரு ராஜ்யம் பீமனுடையதா, ஜராசந்தனுடையதா என்ற கேள்வி எழுந்தால் அவ்விருவரும் குஸ்தி போடுவார்கள். அதில் வெற்றி பெறுவோன் ராஜ்யத்திற்கு உரியவனாகக் கருதப்படுவான். பீமனுக்கும் ஜராசந்தனுக்கும் குஸ்தி நடந்தால் அதனால் மக்களுக்குச் சிரமமெதுவுமில்லை. அவர்கள் வேடிக்கை பார்த்து மகிழ்வார்கள். ஆனால் இக்காலத்திலோ ஹிம்சைப் போர்கள் சிறியனவாயில்லை. அது பெரிய காட்டுத்தீ போல், பிரளய கால அக்கினி போல் பெருகிப் பரந்து விடுகிறது. அதனால் போரிடுவோருக்கும் போரில் சம்பந்தப்படாதோருக்கும் துன்பம் விளைகிறது. குஸ்திக் காலம் கழிந்தபின் போரின் காலம்

வந்தது. பிளாசிப் போர் நடந்த சிறிய களத்தில் ஒரு புறம் இந்தியாவின் படையும் மறுபுறம் ஆங்கிலேயர் படையும் நின்றன. அப்போரில் சிறிது உயிர்ச்சேத மேற்பட்டது; ஆனால் அளவைமீறி ஏற்படவில்லை. அதில் பெண்களோ, குழந்தைகளோ, முதியோரோ, நோயாளிகளோ பிற சாதாரணப் பிரஜைகளோ சம்பந்தப்படவில்லை. ஆனால் இக்காலத்திலோ ஒரு நாடு பிறிதொரு நாட்டை எதிர்த்துப் போரிடுவதால் போர் மிகவும் கொடியதாகி விடுகிறது.

நாளை ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் போர் நடக்கப் போவதானால் ரஷ்யாவின் பக்கத்தில், பத்து, இருபது தேசங்களும் அமெரிக்காவோடு இன்னும் பத்து, இருபது தேசங்களும் சேர்ந்து கொள்ளவும் மிகவும் பயங்கரமான போர் நடக்கத் தொடங்கிவிடும். பின்னர் இக்கட்சியின் ஆடவருக்கு அக்கட்சியின் ஆடவரும், இக்கட்சியின் பெண்டிருக்கு அந்தக் கட்சியின் பெண்டிரும், இக்கட்சியின் மாடுகளுக்கு அக்கட்சியின் மாடுகளும் விரோதிகளாகி விடுவார்கள். இவ்விடத்திய கழுதைகளுக்கு அங்குள்ள கழுதைகள் விரோதம், இங்குள்ள மரங்களுக்கும் அங்குள்ள மரங்களுக்கும் விரோதம், இங்குள்ள ஆலைகளுக்கும் அங்குள்ளவைகளுக்கும் விரோதம் என்று ஆகிவிடும். குண்டை வீசினால் அதில் கழுதை, குதிரை, தொழிற்சாலைகள், பெண்டிர் அனைவரும் அழிவார்கள். அமெரிக்கக் கழுதைகளுக்கு ரஷ்யக் கழுதைகள் நமக்கு விரோதிகளென்பதே தெரிந்திராது. இன்றோ, 'நாட்டின் மக்களே, நீங்கள் அனைவரும் உங்கள் தாய்நாட்டிற்காகப் பலியாகுங்கள்!' என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு பலியானால் பிறகு என்னதான் மிஞ்சும்? கல் மண்ணுக்காக உயிரை விடுவதா?

இப் பேராபத்து இன்று உலகை எதிர்நோக்கியிருக்கிறது. அதனிடம் உள்ள அச்சத்தினால் இன்று மக்கள்

'அமைதி, அமைதி' என்று ஜபித்துக் கொண்டிருக்கி ருர்கள்.

பேராசை, பயம், சுயநலம்—இவற்றின் தூண்டுதல்

பண்டைக் காலத்தில் அந்தணர்கள் 'அமைதி, அமைதி' என்று ஜபம் செய்துவந்தார்கள். ஆனால் அதற்குக் காரண மிருந்தது. உலகில் அமைதி நிலவினால் நமக்கு லாடு கிடைக்குமென்று அவர்கள் எண்ணினர் கள்! இன்றோ இவர்கள் பயத்தினால் 'அமைதி, அமைதி' என்கிருர்கள். பயம் காரணமாக அமைதி ஜபம் செய்வ தனால் உலகில் ஒருபொழுதும் அமைதி ஏற்படாதென்று நான் சொல்ல விரும்புகிறேன். அமைதிக்குத் தனியாகவே மதிப்பேற்படும் பொழுதுதான் உலகில் அமைதி நிலவும். இக்காலத்தில் சிலர் நமக்கு அமைதி தேவை என்கிருர் கள்; சீனம் நமக்கு அமைதி வேண்டுமென்கிறது; ரஷ்யாவும் இதையே சொல்லுகிறது. இந்தியாவோ எங்களுக்கு அமைதி வேண்டும்; ஏனெனில் நாங்கள் எங்கள் நாட்டை முன்னுக்குக் கொண்டுவந்தாக வேண் டும், எங்கள் நாட்டின் செல்வத்தைப் பெருக்கவேண்டு மென்கிறது.

ஒரு விவசாயி தன் வயலில் விதை விதைத்தான். மழை பெய்யாமையால் அவனுக்கு நீர் தேவையாயிருந் தது. அவன் கடவுளிடம் 'ஆண்டவனே எனக்குத் தண்ணீர் அருளும்' என்று வேண்டிக் கொண்டான். அப்பொழுது மழை பெய்தது; பயிர் விளைந்தது. உடனே விவசாயி இனி எனக்கு நீர் வேண்டா மென்ருன். அதே மாதிரி நாடு முன்னேற்றம் எய்திவிட்டால் அமைதியும் தேவையில்லை. பயிருக்காக, பயிர் விளைவதற்காகத் தண்ணீர் தேவை யென்ருனே, அவனுக்கு அது எப் பொழுதுமே தேவையாய் இருப்பதில்லை, சில சமயங் களில்தான் தேவைப்படுகிறது. ஆனால் தாகத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்பவனுக்கு அது எப்பொழுதுமே

தேவையாகும். நான் இந்தப் புதிய மனிதர்களை, 'உங்களுக்கு தண்ணீர் பயிருக்குத் தேவையா, தாகத்திற்கா?' என்று கேட்க விரும்புகிறேன். உங்களுக்கு தாகமா, அல்லது வேறு வகையில் தண்ணீர் தேவையா?

சர்வோதயம் எப்பொழுது வரும்?

இன்று பல தேசங்களுக்கு அமைதி தேவை. ஆனால் அத்தேவை அச்சத்தினின்று தோன்றியிருக்கிறது. ஏனெனில் போர் மூண்டால் குழப்பம் வரும். அவர்கள் குழப்பத்தையும் அழிவையும் விரும்பவில்லை. இதனால் அவர்கள் வேறொரு நலனுக்காக அமைதியை விரும்புகிறார்கள். ஒருவர் அச்சத்தினால் அமைதியை விரும்ப, இன்னொருவர் வேறு பயன் கருதி அமைதி கோருகிறார். எந்தக் காரணத்தினாலாயினும் சரி, அமைதி வேண்டும் வேண்டுமென்று ஜபம் செய்வதனால் அது கிட்டாது. பண்டைக் காலத்தில் அந்தணர்கள் அமைதிக்காக ஜபம் செய்துவந்தார்கள். இன்று அதிகாரம் பெற்றுள்ளவர்களும் அமைதி, அமைதி யென்று உருப் போடுகிறார்கள். சமுதாயம் முழுவதற்கும் அமைதி தாகம் தோன்றக்கூடிய காலம் அணுகிக் கொண்டிருக்கிறது. சமுதாயம் முழுதும் அமைதியிலேயே சக்தியும் அமைதியிலேயே சிக்கல்களுக்குச் சமாதானமும் அடங்கியிருப்பதை எண்ணவும் உணரவும் போகிறது. அச்சத்தினாலோ, ஆசையினாலோ அன்றி தாபத்தினால், தாகத்தினால் அமைதியை விரும்பும்பொழுதே சர்வோதயம் தோன்றும்.

பிரச்னைகளை வரவேற்றல்

இதனாலேயே பிரச்னைகளும் சிக்கல்களும் தோன்றுவதையும், எங்கேனும் பெரும் போர் மூளுமென்ற பேச்செழுந்தால் அதையும் நான் வரவேற்கிறேன். ஏனெனில் அதன் பின் உலகம் முழுமையும் அமைதியிடம் வந்து

சேரும். இப்பொழுது உலகின் முன்னுள்ள பிரச்னை, நமக்குத் தேவையானது போரா, அமைதியா என்பதே. இப்பொழுது அமைதியைத் தூண்டுவதற்கு போர் தேவையில்லை. தேவையானால் ஒரே போர்தான் நடக்கும்; தேவையில்லையானால் அமைதியே ஏற்படும். ஒரு பெரும் போர் நடந்துவிட்டால் உலகம் அமைதியைக் கட்டாயம் சார்ந்துவிடும். இதனால் நான் ஆனந்தமாய் யாத்திரை செய்துகொண்டும் குழப்பமும் அதிருப்தியும் பெருகி வருகையிலும் ஆழ்ந்து தூங்கிக்கொண்டு மிருக்கிறேன். நாம் நம் அறிவைப் பாழாகாதுமட்டும் பார்த்துக் கொண்டோமாயின் இவர்கள் இறுதியில் நம் வழிக்கு வந்துவிடுவார்களென்று எனக்குத் தெரியும். பாரத தேசம் தன் அறிவைப் பறிகொடாதிருப்பின் நாம் உலகிற்கு அமைதிக்கு வழிகாட்டியவர்களாவோம்.

பூதான யக்ஞத்தின் வளர்ச்சி

பூதான யக்ஞம் எப்படி வளர்ந்தது? ஒரு ஆமை, ஒரு முயல். அவை இரண்டும், 'குறிப்பிட்ட இடத்திற்கு யார் முன்னால் போவார்?' என்று பந்தயம் வைத்தன. முயல் ஓடத் தொடங்கிற்று, மிகவும் முன்னாலும் போய் விட்டது; அப்பொழுது ஆமை மெதுவாய் ஊர்ந்து வருவதையும் அது கடக்கவேண்டிய தூரம் அதிகமிருப் பதையும் கண்டது. அதற்குத் தூக்கம் வரவே தூங்கிப் போய்விட்டது. அது உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கையில் ஆமை மெல்ல மெல்ல நடந்து போகவேண்டிய இடத்தில் போய்ச் சேர்ந்துவிட்டது. மற்றவர்களெல்லாம் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருக்க, பூதான யக்ஞ ஆமை தன் நடையில் நடந்துகொண் டிருக்கிறது. 'அங்கே பெரிய பெரிய இயந்திரங்களும், தொழிற்சாலைகளும் நடந்து கொண்டிருக்க, அவற்றுடன் உங்கள் ஆமை போட்டி யிட்டு எப்படி வெல்லும்?' என்று கேட்கிறார்கள். நான், 'இக் கைகள்தான் இவ்வியந்திரங்களையும் தொழிற்சாலை

களையும் சிருஷ்டித்தன. இவைகளே அவற்றிற்கு முடிவும் காணும்' என்று கூற விரும்புகிறேன்.

அமெரிக்காவுக்குச் செய்தி

நம் யாத்திரையில் அவ்வப்பொழுது சில வெளிநாட்டாரும் வந்து சேர்ந்துகொள்ளுகிறுர்கள். ஒரு அமெரிக்க சகோதரர் வந்திருந்தார். அவர் போகையில் என்னிடம், 'அமெரிக்காவுக்கு தாங்கள் ஏதேனும் செய்தியளிக்க வேண்டும்' என்ருர். 'அமெரிக்காவுக்குச் செய்தியளிப்பதற்கு வேண்டிய அதிகப்பிரசங்கித்தனம் என்னிடம் இல்லை. எனக்கு பணி புரியத்தான் தெரியும். அதையே செய்துவருகிறேன்' என்றேன். ஆனால் அவர் நான் ஊருக்குப் போவதால் என் நாட்டவர், 'நீ போனுயே, அங்கே என்ன கேட்டாய், பாபா என்ன சொன்னர், என்று என்னைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது?' என்ருர். அப்பொழுது அவருக்கு ஏதோ சொல்ல வேண்டியதுதான் என்று எனக்குத் தோன்றிற்று. ஆகையால் நான், அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரண்டிற்குமே நான் சொல்ல விரும்புவது, 'நீவிர் இருவீரும் பெரிய பெரிய போர்க் கருவிகளும் கப்பல் முதலியவையும் இப்பொழுது செய்து வருவதை இப்படியே செய்துவாருங்கள். இதை நிறுத்தி விட்டால் உங்கள் நாடுகளில் வேலையில்லாப் பிரச்னை தோன்றிவிடும். ஆனல் நான் உங்களுக்கு இன்னெரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஆயுத பலத்தைப் பெருக்குகிறீர்களே, போர் மூண்டால் ரஷ்யா, அமெரிக்காவின் கப்பல்களையும், அமெரிக்கா ரஷ்யாவின் கப்பல்களையும் அழிக்கும். இது வேண்டாம். ரஷ்யாவும் கிறிஸ்தவ நாடு, அமெரிக்காவும் அப்படியே. டிசம்பர் 25-ந் தேதி என்பது ஏசுநாதர் பிறந்த பெருநாள். அன்று நீங்கள் இருவரும் தம்மிடமுள்ள ஆயுதங்களையும் கப்பல் முதலியவைகளையும்

சமுத்திரத்தில் ஆழ்த்திவிடுங்கள். ரஷ்யா தன் கப்பல் களையும், அமெரிக்கா தன் கப்பல்களையும் ஆழ்த்தட்டும். உங்கள் கப்பல்களை அவர்களும், அவர்கள் கப்பல்களை நீங்களும் கடலில் ஆழ்த்துவதைவிட அவரவர் கப்பல் களை ஆழ்த்தும் வேலையை அவரவரே செய்தல் நலம். இதனால் ஏசுநாதர் போதித்த அமைதியும் கெடாது, வேலையின்மையும் பெருகாது, பிற கஷ்டங்களும் தோன்றா. இந்த வேலைத்திட்டம் அமுலாவதைப் பார்க்க குழந்தைகளும் வருவார்கள். அவர்களுக்கு நான்கைந்து நாள் விடுமுறை யளித்துவிட்டு ஜனவரி முதல் தேதியி லிருந்து தொழிற்சாலைகளில் மீண்டும் வேலை துவக்கி விடுங்கள்' என்றேன்.

இதைக் கேட்டு அவர் சிரிக்கலானார். 'நீங்கள் சிரிக்கி றீர்கள். ஆனால் இது நான் மனப்பூர்வமாய் அளிக்கும் செய்தி. ஏனெனில் நீங்களேதான் யுத்தத்தினால் வேலை கிடைக்கிறது; யுத்தம் நின்றால் இவ்வளவு பேருக்கு வேலை தருவது எவ்வாறென்றே தெரியாமற் போகிற தென்று சொல்லுகிறீர்கள்' என்றேன்.

ரிக்ஷா இழுத்தலும் ஒரு தொழில்!

ரிக்ஷா இழுப்பதை நிறுத்திவிட வேண்டுமென்று நான் சொன்னால் இவர்களுக்கெல்லாம் என்ன வேலை கொடுப்பதென்று கேட்கிறார்கள். அதாவது ரிக்ஷா இழுத்தலும் ஒரு தொழிலாகிவிட்டது. ரிக்ஷாவில் நல்ல வாட்ட சாட்டமாய் கொழு கொழுவென்று உள்ளவர் களும் சவாரி செய்கிறார்கள். சில சமயங்களில், 'இம் முறையை மாற்றுங்கள். அதாவது சவாரி செய்வோர் ரிக்ஷா இழுங்கள், இழுப்போர் ரிக்ஷாவில் ஏறட்டும், அப்பொழுது ரிக்ஷா இழுப்பவர்களுக்கு எவ்வளவு கஷ் டம் இருக்கிறதென்று தெரியும்' என்று நான் சொல்லு கிறேன். இது இவர்களுக்குப் புரிகிறது. ஆயினும்

நடப்பதென்னவோ நடந்து கொண்டேதானிருக்கிறது, பிரச்னை தோன்றிக் கொண்டேதானிருக்கிறது.

சில்லறைச் சச்சரவுகளிடம் அச்சம்

இதனுலேயே ஆயுதங்கள் பெருகிவருகின்றன வென்று நான் சொல்லவில்லை. இக்காலத்தில் இவ்வளவு பிரச்னைகள் தோன்றுவதற்குக் காரணம் நாம் முறைப் படிச் சிந்தியாமையே என்று சொல்ல விரும்புகிறேன். எனக்கு சிறு சச்சரவுகளில் உள்ள அச்சம் ஹைடிரஜன், ஆடம் குண்டுகளிலும் இல்லை. இக்குண்டுகள் தயா ராவது வெளிநாடுகளில் என்ருலும் அவைகளை இந்தியா விலுள்ளவர்கள் ஏருே ஜபம் செய்து கொண்டிருக்கிருர் கள். நான் பீஹாரில் யாத்திரை செய்த காலத்தில் வைத் தியநாதர் கோயிலுக்குப் போனேன். அங்கே யாத்திரீ கர்கள் 'பம்போலோ–போலாநாத்!' 'பம்போலோ–போலாநாத்!' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் இப்பாம்களை, குண்டுகளை போலாநாத் செய்கிருரென்று அறிந்தேன்! நாம் நம் அறிவை இந்த அளவுக்கு இழந்துவிடாமல், நிதானம் தவருமல் இருக்க வேண்டும்.

சிறிய தீப்பொறியினுலேயே பெருந் தீக்கள் வளர்ந்து விடுகின்றன. ஆகையால் சிறு சச்சரவு களை எவ்வாறு தீர்ப்பதென்று நாம் சிந்திக்க வேண்டும். இவை தீர்ந்துபோனுல் நமக்குக் கவலை இராது. இதனு லேயே நடந்தால் ஒரே போர்தான் நடக்குமென்று சொன்னேன். போரினுல் நாசமேற்படுமென்று இவர் கள் நம்மை அச்சுறுத்துகிருர்கள். இதில் அச்ச மென்ன? நானும் சாவேன், நீங்களும் சாவீர்கள். நீங்களும் செத்து நானும் சாவதானுல் இதில் துக்க மெதற்கு? எனக்கு அதில் ஆனந்தமே. அப்பொழுது பூதான யாத்திரைத் தொந்தரவுமில்லை. மனித இனத் திற்கே விடுதலை ஏற்பட்டுவிடும். ஆகையால் உலகப்

போர் வருமென்று சொல்லி உங்களை எவரேனும் பய முறுத்தினால் நீங்கள் சிறிதும் பயப்படாதீர்கள். இதை வெறும் முட்டாள்த் தனமென்றே நீங்கள் கருதுவதாய்ச் சொல்லுங்கள்.

சத்தியாக்கிரஹமென்ற புதியவழி

நாம் உலகப் போரைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை. அது பற்றிய கவலையை அதுவே பட்டுக் கொள்ளட்டும். நாமோ பம்பாயிலும், பெல்லாரியிலும், நாட்டிலும், கிராமத்திலும் சச்சரவு தோன்றாமலிருக்க வேண்டுமென்றே கவலைப்பட வேண்டும். ஆனால் இன்னுமொரு விஷயம். சச்சரவு சண்டை கூடாதென் பது சரியே. ஆனால் நாட்டில் துன்பமிருப்பதனாலேயே சண்டை சச்சரவுகள் தோன்றுகின்றன. மக்களுக்குச் சோறு கிடைப்பதில்லை. அதிலிருந்தே சண்டைகள் எழுகின்றன. சண்டை கூடாதென்று சொன்னால் மட்டும் போதாது. காந்தி மகாத்மா நமக்கு சத்தியாக் ரஹமென்ற புதுவழியைக் காண்பித்திருக்கிறார். சத்தி யாக்ரஹத்தில் பெரிய சக்தி, பேராற்றல் பொதிந்திருக் கிறது. அதனால் குழப்பமும் விளையாது; சண்டை களும் விளையா.

நல்ல சாதனம் தேவை

முன்பெல்லாம் மக்கள், 'அமைதி, அமைதி' யென்று சொல்லி வந்தார்கள். அதாவது, உள்ள நிலைமையை மாற்ற விரும்பவில்லை. இப்பொழுதிருப்பது இப்படியே இருக்கவேண்டும்; குழப்பமும் வேண்டாமென்றார்கள். ஆனால் இப்பொழுதோ புதிய கட்சியொன்று தோன்றி யிருக்கிறது. அது இப்பொழுதுள்ள நிலைமை இப் படியே இருக்கக் கூடாதென்றும் சொல்லுகிறது, குழப்ப மும் கூடாதென்கிறது.

ஒருவனுக்கு நல்ல தாகம். நல்ல சுத்தமான நீர்

அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் தண்ணீரைத் தேடி இங்குமங்கும் சுற்றி யலைந்தான். இறுதியில் அவன் ஒரு அழுக்குக் குட்டையைக் காணவே அதி லிருந்த நீரைக் குடித்து வைத்தான். இப்பொழுது நீங்கள் அவனிடம் தண்ணீரின் குறைகளை விளக்கப் புகுந்தால் அவன், 'சுத்த நீர்தான் அருந்தவேண்டும் என்று எனக்குத் தெரியும். ஆனால் எனக்கோ மரண தாகம். நல்ல தண்ணீர் எங்கும் கிடைக்காமையால் இந்த அழுக்கு நீரைக் குடித்தேன்' என்று சொல் வான். இதே போன்று ஹிம்சையின் மூலம் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்று எவரும் சொல்லுவதில்லை. வேறு வழி தெரியாமையினாலும் அச்சத்தினாலும் ஹிம்சையில் இறங்குகிறார்கள். சுத்த நீரே அருந்த வேண்டுமென்று எல்லோருக்கும் தெரியும். நல்ல சாதனங்களையே கையாள வேண்டுமென்று அனைவரும் அறிவர். ஆகையால் நல்ல சாதனங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்தலே உள்ள வேலை.

உற்பத்தியும் சமப் பங்கீடும்

கம்யூனிஸ்டுகளிடையே எனக்குப் பல நல்ல நண் பர்களுண்டு. அவர்களைக் குறித்து நான் பெருமையும் கொள்ளுகிறேன். முதலில் அவர்கள் என்னிடம் சந் தேகம் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது நான் உள்ள மாற்றத்தையே விரும்புகிறேன், நான் அவர்களின் நண்பன் என்பது அவர்களுக்குப் புரிந்து விட்டது. இதனால் நான் அவர்களுடன் சில சமயங் களில் பேச்சு நடத்துவதுண்டு. அவர்கள் இந்தியாவில் உற்பத்தி குறைவு, வாழ்க்கைத் தரமும் அதபாதாளத் தில் இருக்கிறது என்கிறார்கள். நான் இதற்கு உழைக்க வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என் கிறேன். ஆனால் இன்று சிலருக்கு உண்ண ஒன்றுமே இல்லாதிருக்க, சிலரிடமோ ஏராளமாய் உணவு குவிந்து

கிடக்கிறது. இவ்விருவர்களிடையே டாக்டர்களுக்கு நல்ல வேலை கிடைக்கிறது. தொழில் நன்ருய் நடக்கிறது. இதனுலேயே இப்பொழுது படிப்பவர்களெல்லாம் வைத் தியக் கல்லூரியில் போய்ச் சேருகிருர்கள். இவ் வைத் தியக் கல்லூரிகள் பல்கிப் பெருகவேண்டும் என்பதற் காக இப்பிரச்னையைத் தீர்க்காதிருப்பதா என்பதை நாம் யோசிக்க வேண்டும். உற்பத்தி செய்வதோடு சமப்பங்கீடு செய்யவேண்டும். சிலர் உற்பத்தியை மட்டும் வற்புறுத்துகிருர்கள். ஆனுல் ஒன்றை மட்டும் வற்புறுத்தல் பாதி வேலையைச் செய்ததாகும். விநி யோகம் பற்றி, பங்கீடுபற்றிப் பேசும் பெரியோர்களும் பொருளுற்பத்தி எங்கேயாகிற தென்று சில சமயம் கேட்கிருர்கள். நான் அவர்களுக்குப் பணிவுடன், 'நீங் கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. உற்பத்தியும் விநியோகமும் ஏக காலத்தில் நடக்கவேண்டியவையே' என்று சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவு தேவை

ஒரு குடும்பத்தில் நான்குபேர் இருக்கிருர்கள். அவர்களில் மூன்றுபேரே பொருள் உற்பத்தி செய்தா லும், சம்பாதித்தாலும் மூன்றுபேர் மட்டுமே சாப்பிட வேண்டும் என்று எண்ணுமல் நால்வரும் சேர்ந்தே சாப்பிடுகிருர்கள். ஆகையால் உற்பத்தியும் விநியோக மும் ஏக காலத்தில் நடக்க வேண்டும். அவற்றில் ஒன்று மட்டுமே நடந்தால் சச்சரவும் மோதலும் தோன் றும். நம் நாட்டில் பதினெட்டுச் சேர் பலமிருப்பதாய் வைத்துக் கொள்ளுங்கள். சாதாரண மக்களின் தென்பு எட்டுச் சேர். செல்வவான்களின் தென்பு பத்துச் சேர். எல்லாவற்றையும் சேர்த்தால் உற்பத்தியில் பதினெட்டுச் சேர் ஈடுபடவேண்டும். ஆனுல் உற்பத்தியையும் விநியோ கத்தையும் நாம் ஒரே காலத்தில் செய்யாமையால் அவை இரண்டினிடையிலும் சச்சரவு தோன்றவும், இரு சேர்

YZWM95
N56

களின் பலமே, பயனே ஏற்படுகிறது. பத்துச் சேரையும் எட்டுச் சேரையும் சேர்த்துக் கூட்டுப் பலத்தை உற்பத்திக்குப் பயன்படுத்தினுல் பிரச்னே தீருமா தீராதாவென்று நான் கேட்கிறேன். பத்தையும் எட்டையும் சேர்க்க வேண்டுமென்பதே இதன் பொருள். நாம் நம் சக்தியைக் கூட்டுறவில் ஈடுபடுத்துவோமாக.

சத்தியம் + அன்பு = சத்தியாக்ரஹம்

நீங்கள் கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறீர்களா, சச்தியாக்கிரஹ சமுதாயத்தையா என்று கேட்கிருர்கள். பூதானயக்ஞம் சத்தியாக்ரஹத்திற்குத் தலேசிறந்த வழியென்று சொல்லுவேன். நான் கிராமங் கிராமமாய்ச் சென்று நிலத்தில் உரிமை கொண்டாடுதல் தவறு, தவறு என்று ஜபம் செய்கிறேன், எங்கும் பிரசாரம் செய்கிறேன். வெயிலோ மழையோ சுற்றிக்கொண்டே இருக்கிறேன். இதுதான் சத்தியாக்ரஹம்.

சத்தியாக்ரஹமென்ருல் எதிராளியிடம் அன்பிருக்க வேண்டும்; அவனே வெறுத்தல் கூடாது. மனத்தில் வெறுப்பிருப்பின் ஆயுதமெடுத்துப் போரிடுதல் நலம். ஆகையால் முதலில் நாம் நம் மனத்திலிருந்து வெறுப்பை, துவேஷத்தை அகற்றுதல் வேண்டும். அப்பொழுதுதான் நம் சத்தியாக்ரஹம் வலுப்பெறும். இதனுலேயே காந்தி மகாத்மா சத்தியாக்ரஹத்தில் ஒரு சொல் 'அத்யாஹ்ருதம்' என்ருர். சத்தியாக்ரஹம் என்ற சொற்ருெடர் இடைச்சொல் அற்றதொடர். சத்தியாக்ரஹ மென்ருல் சத்தியத்தின் பொருட்டு அன்பான வற்புறுத்தல். நாம் சத்தியத்தையும் அன்பையும் ஒன்று சேர்ப்போமாயின் சமூகம் முன்னேறும், பொருளுற்பத்தியும் பெருகும், சிக்கல்களும் தீரும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
110497

எமது காந்தீய-சர்வோதய இலக்கியம்

மகாத்மா காந்தி எழுதியவை

		ரூ.	அ.
சர்வோதயம் : (ரஸ்கினின் "Unto This Last"-இன் சாரம்	...	0	5
ஆசிரம வாழ்க்கை	...	1	4
ராம நாமம்	...	0	12
நீதி தர்மம்	...	0	4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	...	0	4
சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	...	1	0
ராட்டை—தத்துவ விளக்கம்	...	1	4
ஆசிரம பஜனாவளி	...	0	8
காந்திஜியின் சுயசரிதம்—சுருக்கம்	...	2	0
கீதாபோதனை	...	0	12

காந்திஜி—கஸ்தூரிபா பற்றியவை

எமது பா : வனமாலா பரீக்	...	1	4
எமது பா : சுசீலா நய்யர்	...	1	4
காந்திக் காட்சிகள் : காகா காலேல்கர்	...	1	4
பாபூ—என் தாய் : மனு காந்தி	...	0	12
பாப்பாவின் காந்தி : ஜுகத்ராம் தவே	...	0	12

தத்துவ நூல்கள்

கீதைப் பேருரைகள் : வினோபா			
சாதா பைண்டு	...	1	0
காலிகோ பைண்டு	...	2	8
வினோபாவின் குரல்	...	0	8
காந்தியும் மார்க்ஸூம் : மஷ்ரூவாலா—வினோபாஜியின் முன்னுரையுடன்	...	1	4
காந்தீய நவநீதம் : கிசோரிலால் மஷ்ரூவாலா	...	1	8

		ரூ.	அ.
காந்தீயப் பொருளாதாரம் :			
ஜே. சி. குமரப்பா	...	1	4
ஐரோப்பாவின் படிப்பினைகள் :			
ஜே. சி. குமரப்பா	...	0	6
சர்வோதயமும் உலக அமைதியும்			
ஜே. சி. குமரப்பா	...	0	2
சுயம்பூர்ண கிராமம்	...	0	5
புக்கர் வாஷிங்டன் : வ. வே. சு. ஐயர்	...	0	8
தன்னம்பிக்கை : எமர்சன் :			
வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்பு	...	0	12
மலஜல சுத்தி : வல்லபஸ்வாமி	...	0	8
துப்புரவு விஞ்ஞானம் : தீரேந்திர மஜூம்தார்	...	0	8

கதர் சாஸ்திரம்

நூற்புக் கணிதம் : கிருஷ்ணதாஸ் காந்தி			
முதல் பாகம்	...	0	6
இரண்டாம் பாகம்	...	0	8
மூன்றும் பாகம்	...	0	14
நான்காம் பாகம்	...	1	0
நூற்புக்கலையின் நுணுக்கங்கள்	...	1	0
தக்ளியால் நூற்பதெப்படி ?	...	0	8
கைராட்டை—அதன் சரித்திரமும் புத்துயிரும்	...	1	8
கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை	...	1	0
பட்டை போட சுலப வழி	...	0	4
நரம்பு செய்தல்	...	0	8
பருத்திப் பிரச்னை	...	0	6
கதர் நெசவு	...	0	8

இதர விபரங்களுக்கு :

சர்வோதயப் பிரசுராலயம்

24, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

எமது பூதானப் பிரசுரங்கள்

*

பூதான உதயம்	—வினோபா
சர்வோதயப் பிரகடனம்	,,
வணிகரே ! வாரீர் !	,,
கிராமங்களுக்கு ஆரோக்கிய திட்டம்	,,
கிராமந்தோறும் சுயராஜ்யம்	,,
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	,,
பூதான ஐய விளக்கம்	,,
சர்வோதய ஆதாரங்கள்	,,
ஜீவன் தானம்	—ஜயப்பிரகாச்ஜி
பூதானப் புரட்சிக்கு அறைகூவல்	,,
சம்பத்துதான யக்ஞம்	—ஜாஜுஜி
பூதானத்தின் புரட்சித் தன்மை	—தர்மாதிகாரி
மனிதப் புரட்சி	,,
பூதானமும் கிராம ராஜ்யமும்	—சங்கரராவ் தேவ்
பூதான ஜோதி	—விமலாதக்கர்
ஒரு மாபெரும் அநீதி	—டால்ஸ்டாய்
பூதானப் பாடல்கள்	—ராமலிங்கம் பிள்ளை
வினோபா வாழ்க்கை	
வினோபாவின் குரல்	—நெ. சிவசுப்பிரமணியம்
பூதான வெள்ளம்	—ம. சௌத்ரி
முதல் கிராமதானம் : மங்கரோட்	
தமிழ் நாட்டில் வினோபாஜியின் பிரவேசம்	
சென்னை நகரில் வினோபாஜி	

கிடைக்குமிடங்கள் :—

கதர் வஸ்திராலயங்கள்.

சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்.